
எகிப்திய
எழுச்சி
ஆசைத்தம்பி

# எகிப்திய எழுச்சி !

ஏ. வி. பி. ஆசைத்தம்பி.

எண்ணப் பூங்கா

சென்னை-1.

பதிப்புரிமை :
முதற் பதிப்பு—1954

## பதிப்புரை

தமிழகத்தைத் தன் வீர மொழிகளாலும், எழுத்துத் திறமையினுலும் வீறு கொண்டெழுந்து மறு மலர்ச்சிப் பாதையில் முன்னேறி நடந்திடத் தட்டியெழுப்பிடும் விருதைவீரர் ஆசைத்தம்பி அவர்களின் கருத்தோவியத்தைத் தமிழகத்தின் பயன் க்ருதி வெளியிடுகின்ருேம். தமிழகம் ஆதரிக்க வேண்டுகிருேம்.

பதிப்பகத்தார்.

விலை ரூ. 1-0-0

கே. ஜி. பிரஸ்,
சென்னை—1.

# வரலாற்றுப் புதுமை

உலக வறலாற்றிலே, எகிப்தில் சமீபத்தில் நடந்த இரத்தமற்ற இராணுவப் புரட்சியைப் போன்று நடந்திடக் காணோம். மக்களை மறந்து, நாட்டின் எதிர்கால வாழ்வைத் துரும்பென மதித்து, மதோன்மத்தனாக வாழ்ந்த பாரூக் மன்னன் மணிமுடி துறந்து நாடு கடத்தப்பட்டான். இது ஓர் வறலாற்றுப் புதுமையாகும்.

அந்த மன்னனது கடந்த கால வாழ்வு பற்றிய பயங்கர உண்மைகளையும், கோலாகல வாழ்க்கைக் கேளிக்கைகளையும் எடுத்துக் காட்டி, எகிப்தில் இராணுவப் புரட்சி ஏற்படுவதற்கான நிலைமைகளை விளக்கிக் காட்டுகிறார் ஆசிரியர் ஆசைத் தம்பி அவர்கள்.

ஆசைத் தம்பி அவர்களைத் தமிழுலகு நன்கு அறியும். அவரது எழுத்து வன்மையும், விஷய விளக்க முறையும், கருத்தாழமும் மிக்க இந்த நூல் தமிழுலகிற்கு நல்லதொரு பாடப் புத்தகமாக விளங்கும் என்பது உறுதி!

தக்க நேரத்திலே இந்நூலை எனக்கு அன்பளிப்பாகத் தந்துதவிய ஆசைத் தம்பி அவர்கட்கு என் இதயங்கனிந்த நன்றி என்றும் உண்டு.

எகிப்திய எழுச்சியை வெளியிட்டு எண்ணத் தெளிவு பெற்றிடும் வாய்ப்பைத் தமிழகத் திற்குத் தரும் நற்பணியை, **எண்ணப் பூங்கா** வினர் மேற்கொண்டு திறம்பட முடித் துள்ளனர். அவர்கட்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மு. நமசிவாயம்.**

# எகிப்திய எழுச்சி!

## 1

மன்னர் வாழ்க! மன்னர்பிரான் நீடூழி வாழ்க! என்று மக்களால் மனதார வாழ்த்தி, ஏத்திப் போற்றப்பட்ட மன்னர் — பாரூக் — எகிப்திய மன்னர் பாரூக் நாடு கடத்தப் பட்டார் — நாட்டை விட்டு ஆறே ஆறு மணி நேர முன்னறிவிப்பின் மீது வெளியேறிவிட்டார்!

வாழ்த்திய மக்கள், போற்றிய மாந்தர், துதித்த குடி படைகள், மன்னர் வெளியேறிய அன்று, அதே மன்னரை வீழ்க மன்னன், தொலைக மன்னர் பாரூக்! என்று முழக்க மிட்டனர்! மன்னரது படங்களை நாடெங்கும் முக்கிய இடங்களிலெல்லாம் மாட்டி வைத்துப் பூஜித்த நிலைமை மாறிவிட்டது! மன்னர் பாரூக்கின் படங்கள் கற்களால் அடித்து நொறுக்கப்பட்டன; துண்டு துண்டுகளாகக் கிழித்தெறியப் பட்டன!

இந்த மகத்தான மாறுதல் தலைகீழான நிலைமை, முற்றிலும் முரணான போக்கு எகிப்து நாட்டிலே ஏற்பட்டது 1952-ம் ஆண்டு மத்தியில்!

கோலாகலமாகப் பகல் பன்னிரண்டு மணி வரையிலே பாங்கான வாழ்க்கையைக் கேளிக்கையெனக் களியாட்டங்களில் நடத்தி வந்த மன்னர் பாரூக், மக்களால், மக்கள் பிரதிநிதிகளால் முடிதுறக்கச் செய்து, ஆறு மணி நேர காலத்திற்குள் எகிப்தின் எல்லையைக் கடந்து, வேறு நாட்டிற்குத் தஞ்சம் புகுந்திடத் தயாராகி விடவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டு விட்டது.

எழுச்சி? எகிப்திய மக்களின் எழுச்சி! எகிப்திய எழுச்சி, எல்லாம் வல்லவனாக வாழ்ந்து வந்த மன்னனை முடிதுறக்கச் செய்து விட்டது.

மனித இன வரலாற்றிலே, மக்கள் சமுதாய முன்னேற்றப் பாதையிலே, புரட்சி யுகங்களிலே காணாத, கேட்காத, ஏன், கற்பனை செய்தும் பார்க்காத அளவில் ஏற்பட்டு விட்டது! எகிப்திய எழுச்சி ஓர் வரலாற்றுப் புதுமை — புரட்சி!

வரலாற்றுப் புதுமை! புதுமைப் புரட்சி, எகிப்திய எழுச்சி!

'மன்னரே! உமது ஆட்சி தேவையில்லை! முடி துறந்தாகவேண்டும், உடனே! அதுமட்டுமல்ல, நீர் இந்த நாட்டை விட்டு, இன்னும் ஆறே ஆறு மணி

நேரத்தில் வெளியேறியாகவேண்டும். இந்த நாட்டுக் குடிகளின் தலைவராக, தந்தையாக, பாதுகாவலராக இருக்க நீர் சிறிதும் தகுதியற்றவர் என்பது மட்டு மல்ல, நீர் இந்த நாட்டின் குடிகளில் ஒருவராகக்கூட வாழத் தகாதவர். இந்த நாட்டு மண்ணிலே பிறந்தீர்— வாழ்ந்தீர் — மன்னராகவும் விளங்கினீர். ஆனால் இனி நீங்கள்எகிப்து குடிமகனுகக்கூட இங்கே, இந்த எகிப் திய மண்ணிலே இன்னும் ஆறு மணி நேரத்திற்குமேல் தங்குதல் கூடாது. எங்காவது எகிப்திய மண்ணைத் துறந்து, எல்லையைக் கடந்து வெளியேறிவிடக் கட்டளை யிடுகிறோம்.' என்ற கருத்துப்பட எகிப்திய மக்களின் எழுச்சியின் எதிரொலி — மக்கள் குரல் — கட்டளை யாக மன்னரிடம் இராணுவத் தலைவர்களால்—மந்திரி சபையினரால் — பகல் பன்னிரண்டு மணிக்குப் பிறப்பிக்கப் பட்டது.

மன்னர் மறுப்பேதும் சொல்லவில்லை — செய்ய வில்லை. செய்யவோ, சொல்லவோ சக்தியற்று, மக்கள், குரலுக்குக் கட்டுப்பட்டு கீழ்ப்படிந்து, முடி துறந்தார் —நாட்டையும் துறந்து வெளியேறினர்.

தனது ஆசை மனைவி, அன்புக் குழந்தைகள், மிக அவசியமான பெட்டி, படுக்கைகள், ஆகியவற்றுடன், மாலை நேரத்தில், மன்னன் - மணிமுடி துறந்த மன்னன் பாரூக், தனது நாட்டை விட்டு — துறந்து, வேற்று நாட்டுக்குக் குடிபுகுந்திடப் பயணமாகி விட்டான்.

மன்னன் பாரூக்கின் வீழ்ச்சியும், அதற்குக் காரண மான எகிப்திய எழுச்சியும், எகிப்தியருக்கு மட்டுமல்ல.

உலக மனித குலத்திற்கே ஓர் மகத்தான பாடமாகும். சிந்திக்கத் தெரிந்து, சிறந்த வாழ்வு — நல்ல வாழ்வு — நாகரிக வாழ்வு வாழ விரும்பிடும் அத்தனை மனிதர் கட்கும் சிறந்ததொரு சம்பவமாகும், எடுத்துக் காட்டாகும். எகிப்திய எழுச்சி.

தலைகால் தெரியாது, தலைக்கனம் மிகுந்து, மக்களை மறந்து கேளிக்கைக் கோலாகலங்களிலே கட்டுக்கு மீறிக் காட்டுத் தர்பார் நடத்திடும் மன்னர்கள், மாவீரர் கள், கனதனவான்கள், ஆட்சியாளர்கள் அத்தனை பேருக்கும், பாரூக்கின் பரிதாப முடிவு, பயங்கர வீழ்ச்சி, திடீர்ச் சரிவு—தலைகீழ் மாறுதல் தக்கதொரு எடுத்துக் காட்டுமட்டுமல்ல-மனிதப் பண்பு விழித் தெழுந்து எகிப் திய எழுச்சியின் மூலம் விடுத்துள்ள அறை கூவலாகும்.

'மக்களா ! மக்கள் குரலா? மக்களின் குறைகளா! என்று கேலியோடும் கிண்டலோடும் கேவலமாகக் கருதிக் கேட்டு, மதியாது நடந்து விடும் மன்னர்களின், ஆட்சியாளர்களின் ஆணவப் போக்கிற்கு, அடாத முறைகளுக்குக் காலம் கன்னத்திலறைந்து 'கவனி! கருத்தோடு நட,' என அறிவுறுத்திடும் நிகழ்ச்சியே எகிப்திய எழுச்சி !

எகிப்திய எழுச்சி! மக்களின் புரட்சி! மன்னன் வெளியேற்றம் அத்தனையும் கத்தியின்றி, இரத்தமின்றி நடந்து விட்டது என்பதை எண்ணும் போது காலமும் கருத்தும் எத்துணை அளவு முன்னேறியுள்ளது, சக்தி பெற்றுள்ளது என்பதை மனித மனம் படைத்த அத் தனை மக்களும் உணர்வர் — உணரவேண்டும்.

இத்தகு எழுச்சி, புரட்சி எகிப்தில் ஏற்பட்டது எவ்விதம்? ஏன்? எதனுல்! என்பதை அறிந்து கொள்ள வேண்டியது, இக்கால உலகிற்கு நல்லது மட்டுமல்ல, நல்லறிவுப் பாதை வழியே நடந்திடத் துணிவும், தெளிவும், தோழமையுள்ளமும் ஏற்படும் – ஏற்படுத்தும் என்பதை எவரும் மறுக்க முடியாது!

எகிப்திய எழுச்சி எழுந்த விதம் – வழி, வகை — முறை — பாதை என்ன?

மன்னன் செய்த தீங்குதான் யாது?

எகிப்திய நாட்டு மக்களின் வாழ்வு — வருங்கால வாழ்வு எந்த வழி செல்லுகின்றது?

இவைகளுக்கெல்லாம் விடைகாண மன்னர் பாருக் அவர்களின் வாழ்க்கை ஏடுகளேயும், எகிப்திய வரலாற்று நிகழ்ச்சிகளேயும் புரட்டிப் பார்க்கவேண்டும். மன்னரது வாழ்வும் வாழ்க்கைமுறையும், மக்களின் நிலேயும், வாழ்க்கை முறையும், இடையே ஏற்பட்ட கொந்தளிப்புகளும், குமுறல்களும், அப்போதுதான் தெள்ளத் தெளியத் தெரியும்; எகிப்திய எழுச்சியின் வித்தும், வளர்ச்சியும், மலர்ச்சியும் முழு வடிவில் புரியும்.

மன்னர் பாருக் இன்று மாஜி மன்னராகி விட்டார்– மாஜி மன்னராக ஆக்கப்பட்டு விட்டார். அந்த மாஜி மன்னரது கடந்தகால வாழ்வு மிகமிக விசித்திரமும், வேடிக்கைகளேயும் கொண்டதாக விளங்குகின்றது.

## 2

எகிப்து! உலக வரலாற்றிலே பன்னெடுங் காலத்திற்கு முன்பிருந்தே பலவகைகளிலும் பேரும் பெயரும் சீரும்சிறப்பும் பெற்றுத் திகழ்ந்துவந்துள்ளது. ஆப்ரிக்காவின் சகாரா பாலைவனத்தினிடையே பூத்துக் குலுங்கிடும் மிகப் பெரும் பாலைவனச் சோலை என எகிப்தை அழைத்திடலாம். பாய்ந்து வெள்ளப் பெருக்கெடுத்தோடும் நைல் நதி தீரத்திலே அமைந்துள்ள எகிப்து உலக வரலாற்றில் சமீபகால நிகழ்ச்சிகளில் மிகப் பெரும் பங்குகொண்டிருந்தது. எகிப்தில் உலக அதிசயங்களில் ஒன்றாக இடம் பெற்றுவிட்ட 'பிரமிட்' கோபுரங்கள் இருக்கின்றன.

எகிப்தின் கடந்தகால பெருமையையும், செல்வச் சிறப்பையும் கலைத்திறனையும் உலகிற்கு என்றென்றும் நிலைத்து நின்று தெரிவித்தபடி இருக்கின்றன அந்த பிரமிட் கோபுரங்கள். ரோம்சாம்ராஜ்யத்தை ஆண்ட மாவீரர்கள் ஜூலியஸ்ஸீஸர், அண்டனி, ஆகியோரைத் தனது அழகினால் அன்பு மொழியினால் சரச சல்லாப சாகஸங்களால் மயக்கி அடக்கி ஆட்டிப் படைத்த எழிலரசி கிளியோபாட்ரா வாழ்ந்தாள் என்று கூறப்படும் காலத்திற்கு முன்பிருந்தே இந்த பிரமிட் கோபுரங்கள் எகிப்தின் பெருமையை எடுத்துக் காட்டி வருகின்றன.

இந்த பிரமிட் கோபுரங்கள் யாரால் எந்த மன்னரால், எப்போது, எதற்காக கட்டப்பட்டன என்பதைப் பற்றி முடிவான முடிவுகாண முடியவில்லை இன்னும். அந்த கோபுரங்களின் உட்புறங்களில் எகிப்து மன்னர்களின் சவங்கள் அடக்கம் செய்யப்பட்டனவாம். அவைகளின் உள்ளே இருக்கும் அறைகளிலே ஏராளமான பொன்னும் மணியும், மற்றும் பெரும் செல்வங்களும் குவிக்கப்பட்டிருந்தன என்று சொல்லப்படுகிறது.

ஐரோப்பா கண்டத்துக்கும் எகிப்துக்கும் இடையே மத்திய தரைக்கடல் தானிருக்கிறது. இதன் காரணமாக ஐரோப்பாவிலே தோன்றிய அத்தனை ஏகாதிபத்தியங்களும், வல்லரசுகளும் அடிக்கடி எகிப்தின் மீது படை எடுத்த வண்ணமே இருந்தன. இத்தகைய வெளி நாட்டுப் படையெடுப்புகளை யெல்லாம், எகிப்து தீரத்துடன் எதிரிட்டு போரிட்டுத்தான் வந்துள்ளது.

முகமதிய மதம் தோன்றிய பிறகு எகிப்து முகமதிய நாடாகமாறியது. எகிப்து மக்கள் பெரு வாரியாக முகமதிய மதத்தைத் தழுவினர். பல்லாண்டுகளாக எகிப்து, மனிதனை மனிதனாக வாழவைத்திடும் முகமது நபியின் நற்போதனைகளைக் கடைப் பிடித்து நல்வாழ்வு வாழ்ந்து வருகிறது.

உலகெங்கும் தனது வியாபார வேட்டையை நடத்தி வந்த ஆங்கிலேயர்கள் கிழக்குக் கோடியில் உள்ள நாடுகளுடன் வியாபாரத் தொடர்பை மத்திய தரைக்கடல் மூலம் குறுக்கு வழியில் நடத்தி வந்த நேரத்திலே சூயஸ்

கால்வாய் வெட்டப்பட்டது. சூயஸ் கால்வாய் எகிப்தின் எல்லையைச் சேர்ந்தது. அந்த நேரத்தில் .சூயஸ் கால்வாயின் முக்கியத்துவம் அளவிட்டுக் கூற முடிாயதனவாக இருந்தது.

இந்தியாவுக்கும், மற்றும்கிழக்குக் கோடியில்உள்ள நாடுகளுக்கும் குறுகிய புதிய கடல்மார்க்கத்தை சூயஸ் கால்வாய் ஏற்படுத்தி விட்டது. இதனுல், சூயஸ் பகுதியைச் சேர்ந்த எகிப்து நாட்டின் நிலேமை மற்ற நாடுகளில் அதிகமாக மதிப்பிடப்பட்டது. வாணிபம் செய்ய ஒவ்வொரு நாடுகளிலும் வணங்கி வாழ்த்தி உரிமை வேண்டி நுழைந்து படிப்படியாக அந்த நாடுகளின் நாட்டாண்மைக்காரராக தமது வஞ்சக தந்திர முறைகளாலும், துப்பாக்கி முனேகளேக்காட்டி அச்சுறுத்தியும் அடக்கியும் ஆட்சிப் பொறுப்பைப் பெற்று வந்தனர் ஆங்கிலேயர்கள்.

கிழ்நாட்டு வியாபாரப் போக்கு வரத்திற்கு அச்சாணி போன்ற சூயஸ் கடல் மார்க்கத்தில் ஏகபோக உரிமை கொண்டாட ஆங்கில ஏகாதிபத்தியம் எல்லா முனேகளிலும் முனேந்து பாடுபட்டுவெற்றியும் கண்டது. இந்த முறையில் எகிப்தில் ஆதிக்கம் செலுத்தி சூயஸ் பகுதிகளில் தமது படைகளே நிறுத்தி தனது ஆதிக்கத்தை நன்கு நிலேத்திட ஆங்கிலேய ஏகாதிபத்தியம் எகிப்து நாட்டையும் தன் வெறிக்குப் பலியாகக் கொண்டு விட்டது.

ஆங்கில ஏகாதிபத்தியம் முதன் முதலில் 1882-ம் ஆண்டு எகிப்தில் கால்வைத்துத் தனது ஆட்சியை நிலே

நிறுத்தத் தொடங்கியது. எகிப்து நாட்டைத் தனது துப்பாக்கி வேட்டுகளால் திணற வைத்த ஆங்கிலேயன் எகிப்தின் செல்வத்தையும் சிறிது சிறிதாகச் சுரண்டி வந்தான். எகிப்திய மன்னர் பெயருக்கு மன்னராக விளங்கி வந்தாரே தவிர நாடாண்டிடும் அதிகாரமனைத் தும் ஆங்கிலேயரின் பிடியிலேயே இருந்து வந்தது.

முதலாம் உலகப் பெரும்போருக்குப் பின்னர் எகிப்து மக்கள் விழிப்புற்று எழுச்சிகொண்டு உரிமைக் குரல் எழுப்பத் தொடங்கினர். இதன் விளைவால் ஆங் கிலேயர் தமது அதிகாரத்தை எகிப்து மன்னரிடம் ஒப் படைத்துவிட்டுத் தமது பிடியைத் தளர்த்திக் கொண்டனர்.

1936-ல் ஆங்கிலேயரின் பிடி அகன்று விட்டது என்றும் ஆனால் எகிப்தின் பாதுகாப்புக்காக ஆங்கிலே யரின் படை 1956-ம் ஆண்டு வரையில் இருக்கவேண்டும் என்றும் ஒப்பந்தம் செய்து கொண்டனர், இருவரும்.

அன்னியரின்பிடி அகன்றும் அந்நியப்படை நாட்டில் நடமாடுவதை எகிப்திய மக்கள் சகியாது எதிர்க்கத் தலைப்பட்டனர் என்றாலும், ஆங்கிலப்படை சூயஸ் பகுதிகளில் இன்னும் நடமாடிக்கொண்டுதான் வருகின்றன.

எகிப்திலே பெருமளவுக்குக் கிடைக்கும் வெண் பஞ்சு உலகச் சந்தையில் பொன்னைப் போன்று மதிப் பிடப் பெறுகிறது. எகிப்திய பஞ்சுக்கு "வெண்

பொன் " (White Gold) என்றொரு சிறப்புப் பெயரும் உண்டு. இத்தகைய வளமும் வசதியும் கடலாதிக்கத்தின் அச்சாணிபோன்ற சூயஸ் பகுதியையும் விட்டு வெளியேற எளிதில் ஆங்கில ஏகாதிபத்தியம் இசையுமா ?

இவ்விதம் ஆங்கில ஏகாதிபத்தியத்தின் பிடியில் சிக்கிச் சீரழிந்து சுரண்டப்பட்டு வறண்ட வாழ்க்கை வாழ்ந்து வந்த எகிப்தியர்; ஏகாதிபத்தியத்தை எதிர்த்த எகிப்து மக்கள்; தலைவர்களையும், மன்னர்பிரானையும் தங்கள் கண்ணேபோல் கருதத் தொடங்கினர்.

ஆங்கிலப் பிடியில் இருந்து அரசியல் விடுதலை அடைந்த நேரத்தில் இன்றைய மாஜி மன்னர் பாரூக் 16-வயது இளம் வாலிபனாக—இளவரசனாக இருந்தார். இளவரசன் என்ற முறையில் பாரூக் தம்மிஷ்டம்போல் ஆடல்பாடல்களிலும், விளையாட்டு வேடிக்கைகளிலும் ஈடுபட்டு வெளிநாடுகளுக்கும் போய் வந்து கொண்டிருந்தார்.

1937-ம் ஆண்டு 17 வயதே நிறைந்த இளவரசர் பாரூக் ஸ்விட்சர்லாந்திலே செண்ட்மாரிட்ஸ் நகரத்தில் மழைக்காலத்தில் வருடா வருடம் நடைபெறும் பலவித கேளிக்கைக் களியாட்டங்களையும், பனிச்சருக்கல் போன்ற விளையாட்டுக்களையும் காண்பதற்குச் சென்றிருந்தார். இந்த விளையாட்டுகளிலே உலகிலுள்ள மிகப் பெரும் பணம் படைத்தவர்கள் கலந்து கொள்வர்.

அப்போது எகிப்தை ஆண்டு வந்த ரீஜன்ஸிகௌன் சிலிலிருந்து எகிப்து மன்னராக முடி சூட்டிக்கொள்ளும் உரிமையை இளவரசர் பாரூக் பெற்று இருந்தார். இள வரசர் பாரூக் மாரிட்ஸ் நகருக்கு மாரிகால விளையாட்டு களைக் காண தனது தாய் ராணி 'நஸ்லீ'யுடனும் தனது சகோதரிகளுடனும் சென்றார். இவர்களுடன் ஷாபினாஸ் ஜுபில்கார் என்ற வேறொரு இளமங்கையும் அழைத்துச் செல்லப்பட்டாள்.

அந்த இளங் குமரி மன்னர் குடும்பத்தையோ அல்லது வேறெந்த அரச பரம்பரையையோ சேர்ந்தவ ளுமல்ல. அவள் கெய்ரோவிலுள்ள நீதிபதி ஒருவரின் புதல்வியாவாள்.

ஷாபினாஸ் அப்போது 15 வயதே நிறைந்திருந்தாள். நல்ல அழகி. மயக்கும் விழிகள். கவர்ச்சிகரமான உருவத் தோற்றம் கொண்டவள். வாலிபத்தின் வசீ கரம் நிறைந்த அந்தப் பருவ வயதிலே அவள் எகிப்தின் எழிலரசியாக பாரூக்கின் எண்ண அலைகளிலே மிதந்து உள்ளம்கவர்ந்து விட்டாள். அரச குடும்பத்தைச்சேராத ஷாபினாஸ் அரச பரம்பரயினர்போல் அலங்கார ஆடை கள் அணிந்து அரச குடும்பத்துடன் உல்லாசபிரயாணம் செல்லும் வாய்ப்புப் பெற்றது பாரூக்கின் பிடிவாத குணத்தின்விளைவுதான் என்றால் மிக மிகப் பொருந்தும். நடந்ததும் அதுதான்.

வாலிபன் பர்ரூக் தனது சகோதரிகளுடன் அரண்மனைத் தோட்டத்திலே துள்ளி விளையாடிய ஷாபினாஸைக்

கண்டு அவளே தனது எதிர்கால மனைவி—எழிலரசி—துணைவி—என்று எண்ணமிட்டுத் தீர்மானித்துமிருந்தான். ஸ்விட்சார்லந்துக்கு உல்லாசப் பிராயணம் செல்ல ஏற்பாடு செய்து அதற்கான எல்லா வசதிகளும் செய்யப்பட்டன. புறப்பட இன்னும் மூன்று நாட்களே இருந்தன. உல்லாசயாத்திரையின் உயர்வைப் பற்றியும் அங்கு நடக்கும் கேளிக்கைகளைப் பற்றியும் கனவு கண்டவண்ணம் ஆழ்ந்த நித்திரையில் இருந்தது அரச குடும்பம்.

ஆனால் இளவரசன் பாரூக் மட்டும் படுக்கையில் தூங்க முடியாமல் புரண்டுகொண்டு இருந்தான். படுக்கையைவிட்டு எழுந்து அமர்ந்தான். அவனது எண்ணத் திரையிலே ஷாபினுஸின் எழிலோவியம் நடமாடிக் கொண்டிருந்தது. தனது உள்ளங் கவர்ந்த அந்த எழிலோவியத்தைவிட்டுப் பிரிந்து வேறுநாட்டுக்குச் செல்கிறோம், மூன்று நாட்களுக்குப் பிறகு அவளது வண்ண ஓவியத்தை நேரில் கண்டு களிக்க முடியாதே என்று எண்ணி ஏக்கப் பெருமூச்சு விட்டான்.

"ஷாபினுஸ்! எனது எழிலோவியமே!! எண்ணச் சித்திரமே!!! எனது இதயகீதமே என்னிடமிருந்து உன்னைப் பிரித்து எகிப்திலேயே விட்டுவிட்டு நான் மட்டும் உல்லாசபவனி வருவதா? கண்களுக்கு விருந்தாகிடும் கட்டழகியே! உன்னைக்காணுமல் கணமும் இருந்திடேன். களியாட்டத்திற்கு நீயும் உடன் வரவேண்டும். வா! வா!! வா!!!" என அவனது எண்ணத் திரையில் நடமாடிய ஷாபினுஸின் எழிலுரு

வத்தைக் கைகாட்டி அழைத்தபடி எழுந்தான். ஏமாந் தான். கனவுக் கன்னியை நினைத்து சித்தங்கலங்கினுன்.

"ஷாபினுஸ்! ஷாபினுஸ்!! என்று முணு முணுத் தபடி குறுக்கும் நெடுக்கும் உலவிக் கொண்டிருந்தான் பாருக். ஷாபினுஸ் இல்லாமல் நான் மட்டும் போவதா? ஷாபினுஸ் இல்லாத இடம் வெறும் வெளியாகத்தானே இருக்கும். ஷாபினுஸ் மட்டும் உடன் இருந்தால்......? உடன் வந்தால்...? உல்லாசபவனி உண்மையிலேயே உல்லாச மாகத்தானே இருக்கும்? அவளும் உடன் வரவேண்டும், அழைத்துச் சென்ருகவேண்டும். அதுதான் சரி என்ற எண்ணம் தோன்றியது. தீர்மான மாகி முடிவும் செய்தான்.

ஷாபினுஸ் உடன்வர, வேண்டும் உடன் உல்லாசப் பவனிக்கு அழைத்துச் செல்லப்படவேண்டும் என்று பாருக் தீர்மானம் செய்து விட்டான்! தனது மனக் கிளர்ச்சிக்கு, மன உல்லாசத்திற்கு ஏற்றபடி காரிய மாற்றத் தொடங்கி விட்டான்.

இரவு நேரம் என்பதையும் மறந்தான், இளவரசன் பாருக். உடனே ஷாபினுஸின் பயணத்தை நிச்சயப் படுத்த விரும்பினுன். பொழுது விடியும்வரை பொறுத் திருக்க பாருக் தயாரில்லை.

மன்னராகப் போகும் பாருக் இளவரசனுக இருந்த போதே, தான் நினைத்த நிகழ்ச்சிகள் அத்தனையும்

உடனே நடந்தாக வேண்டும் என்ற பிடிவாதங் கொண் டவனாக விளங்கினான். இந்தக் குணம் அவனது பதி னேழாம் வயதிலேயே அளவுக்குமீறி, அதிகார வெறி யுடன், ஆர்ப்பாட்டம் செய்திடத் தூண்டிவிட்டது.

ஷாபினாஸ் பெற்றோரிடம் இரவே தனது முடி வைத் தெரிவித்து, மூன்று தினங்களுக்குள், அவள் சுவிட்சர்லாந்துக்குப்புறப்படத் தயாராகவேண்டுமென்ற செய்தியைக் கூறி உறுதிப் படுத்தத் துடித்தான்.

இந்தத் துடிப்பு, ஆசைப் பெருக்கு அளவு கடந்து ஓடியது. நள்ளிரவு என்பதையும் மறந்தான். தனது தாய் நஸ்லீயைத் தூக்கத்தினின்றும் எழுப்பினான். இரவிலே, இளவரசன், தூங்காது தன்னைத் தட்டி எழுப்பியதைக் கண்டு தாய் சற்று திடுக்கிட்டுத்தான் போயிருப்பாள்.

'என்ன பாரூக்! ஏன்? என்னவேண்டும், இந்த நேரத்தில், என ஆர்வத்தோடு கேட்டாள்.

அம்மா! நாம், இன்னும் மூன்று தினங்களில் சுவிட்சர்லாந்துக்குப் புறப்பட இருக்கிறோம். நம்முடன் நீதிபதி ஜுல்பில்காரின் மகள் ஷாபினாஸ் ஜுல்பில்கார் வரவேண்டும். கண்டிப்பாக அவள் வந்தாகவேண்டும். அவள் நம்முடன் வரவில்லையானால், நானும் வரமாட் டேன். இது நிச்சயம். அம்மா, அவர்கள் வீட்டுக்கு உடனே டெலிபோன் செய்து, இதனைத் தெரிவித்து. அவளைப் புறப்படும்படித் தெரிவித்து விடுங்கள், சீக்கிரம், ஆகட்டும், அம்மா" என்று வற்புறுத்தினான்.

பாருக் ஷாபினூஸ் வந்தாக வேண்டும் என்பதை அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்து விட்டான், தாயிடம்.

தாய் எவ்வளவோ எடுத்துக்கூறித் தடுத்தும் பாரூக் விடாப்பிடியாக ஷாபினூஸ் உடன் வந்தாக வேண்டும் என்று கூறிவிட்டான். உடனே டெலிபோன் செய்து ஷாபினூஸ் பெற்றோரிடம் தெரிவித்து விடும்படியும் தாயாரைத் தூண்டினான், துடிதுடித்துக் கொண்டே இருந்தான். பாரூக் தாயை டெலிபோனிடம் அழைத்துச் சென்று, தானே ஷாபினூஸ் வீட்டு எண்ணைச் சுற்றினான். இரவுக்காலமாதலால், தூக்கத்திலிருந்து நீதிபதி வீட்டார் எழுந்து பதில் பேசச் சற்று தாமதமும் ஆகியது.

நீதிபதி ஜூபில்காரின் மனைவி, திருமதி ஜூபில்கார் தான் டெலிபோன் மணியடித்த ஒலிகேட்டு விழித்தெழுந்து பதிலளித்தார்கள். பதில் கிடைத்ததும், பாரூக், டெலிபோன் கருவியைத்தாயாரிடம் கொடுத்துப் பேசும்படிக் கூறினான். ராணி நஸ்லீ என்ன செய்ய முடியும்!

ராணியாரின் குரல் டெலிபோனில், திருமதிஜூபில்காருக்குக் கேட்டது. 'ஷாபினூஸ் இன்னும் மூன்று தினங்களில் சுவிட்சர்லாந்துக்கு, மன்னர் குடும்பத்துடன் புறப்படத் தயாராக வேண்டும்.' என்று ராணி கூறினார்கள்.

எதிர்பாராத இந்தச் செய்தி திருமதி ஜூபில்காரைத் திடுக்கிடச் செய்து விட்டது. எனினும் அவர்கள்

சற்று நிதானித்து " ராணி அவர்களே, ஷாபினுஸ் தங்கள் குடும்பத்துடன் எப்படி வரமுடியும்! அவள் வரமுடியாது", எனத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொண்டாள்.

இது கேட்டதும் ராணியாருக்கு கோபம் வந்து விட்டது. அதெல்லாம் முடியாது. ஷாபினுஸ் வந்துதான் ஆகவேண்டும்" என்று கண்டிப்பாகக் கூறினர். இதற்கு திருமதி ஜுபில்கார், 'என் மகள் இன்னமும் பள்ளியில் படித்துக் கொண்டிருக்கிருள். படிப்பைக் கெடுத்துக் கொண்டு அவள் உல்லாசப் பயணம் வரமுடியுமா?", என்று நயமாகக் கேட்டும் ராணியார், அவள் வந்துதான் ஆகவேண்டும் என வற்புறுத்திக் கொண்டே இருந்தார்.

திருமதி ஜுபில்காரின் நிலை மிக மிகச் சங்கடமான தாகி விட்டது. ஏதேதோ காரணங்களைக் கூறி மறுத்தார். குளிர் காலத்திற்கேற்ற உடைகள் இல்லை என்ருர். அதற்கு அவற்றை ஐரோப்பாவில் வாங்கிக்கொள்கிரும் என்று ராணி கூறிச் சமாதானம் செய்தார். புறப்பட நாட்கள் நெருங்கி விட்டன என்ருர்! பரவாயில்லை' என்று ராணி மறுத்துப் பேசினர்.

வயது வந்த ஷாபினுஸ் தனியே அரச குடும்பத்துடன் எப்படி வரமுடியும் என்றும் கேட்டார், திருமதி ஜுபில்கார்! 'அதற்கென்ன, நீங்களும் உடன் வரலாம், தடையில்லை. எப்படியும் ஷாபினுஸ் புறப்பட்டாக வேண்டும்,' என்று ராணியிடமிருந்து பதில் கிடைத்தது. ஏதும் கூறத் தெரியாத நிலையில் "என் கணவரைக் கேட்டுத்தான் முடிவு சொல்ல முடியும்," என்றதும் ராணி "சரி,

சரி, கணவரைக் கேளுங்கள், ஆனல் அவரிடம் நாட்கள் நெருங்கி விட்டன, காலம் கடத்த முடியாது என்றும், இது அரச குடும்பத்தின் விருப்பம்–முடிவு—மறுக்கக் கூடாது என்றும் கூறுங்கள்" என்று கண்டிப்பாகக் கூறிப் பேச்சை முடித்தார்.

திருமதி ஜூபில்கார், வேகமாகச் சென்று தமது கணவரை எழுப்பி, ராணியாரின் கட்டளையைக் கூறிக் கலங்கினுள். நீதிபதி ஜூபில்கார் செய்தி கேட்டு மன வேதனைப் பட்டார். படிக்கும் பெண்ணை வேடிக்கை விளையாட்டுகளைக் காண அனுப்புவதற்கில்லை என்று கூறிவிடலாம் என்று மனைவியைத் தேற்றினர்.

ஆனல் விரைவில் டெலிபோன் மணி அடித்தது. ராணிதான் பேசினர். ஷாபினுஸ் தங்களுடன் புறப்படு வது பற்றி என்ன முடிவு செய்தீர்கள் என்று கேட்டார். திருமதி ஜூபில்கார், தமது கணவர், தமது மகள் படிப் பதைத்தான் விரும்புகிறர். எனவே ஷாபினுஸ் படிப்பை விட்டு உல்லாசப் பயணம் வருவதற்கில்லை' என்று பதில் சொன்னர்.

பாருக் தன் தாயின் பக்கத்திலிருந்தபடி தூண்டிக் கொண்டே இருந்தான். ராணியும் தனது அரசாங்க அதிகாரத்தைப் பிரயோகித்தாள். அரச ஆணை, ஷாபி னுஸ் அரச குடும்பத்துடன் சுவிட்சர்லாந்துக்குப் புறப் படவேண்டும் என்பது. கட்டளைக்குஜூபில்கார் கீழ்ப் படிய வேண்டும் என்று உத்திரவிட்டார். வேறு வழி யின்றி அரச ஆணைக்குக் கீழ்படிந்து ஷாபினுஸின் பெற்

ஞேர்கள் அவளை அரச குடும்பத்தினருடன் உல்லாசப் பிரயாணத்திற்கு அனுப்பி வைத்தனர்.

நீதிபதியின் மகளாகப்பிறந்த கட்டழகி ஷாபினூஸ், இளவரசன் பாரூக்கின் இதயத்திலே இடம் பெற்று விட்டாள். இளவரசன் அவளைப் பிரயாண முழுதும் விட்டுப்பிரியாது தொடர்ந்து பக்கத்திலேயே இருந்தான். அவன் அவளுடன் அதிகம் பேசவில்லை யென்றாலும், அவளை அப்படியே அள்ளி விழுங்கி விடுவது போல ஓயாமல் பக்கத்திலிருந்தபடி பார்த்துக் கொண்டே இருந்தான்.

ஷாபினூஸ், அரசிளங் குமரிகளைப் போன்றே அலங்காரமாக ஆடையணிகள் பூண்டு ஐரோப்பா முழுதும் பாரூக் குடும்பத்தினருடன் கலந்து சுற்றி வந்தாள். பாரூக் இடை விடாது, அவளது அருகிலேயே கண்ணும் கருத்துமாக இருந்து வந்தான். ஒரு சமயம், ஷாபினூஸ் பனிக் கட்டியில் சறுக்கி விளையாடும் போது, கீழே விழுந்து விட்டாளாம். அதைக் கண்டு மனம் பொறு பாரூக், அன்று முதல், ஷாபினூஸ் பனிக்கட்டியில் சறுக்கி விளையாடுவதைக் கூட விரும்ப வில்லையாம்.

ஷாபினூஸிடம் அளவு கடந்த ஆசை கொண்டு இளவரசன் இருப்பதைக் கண்டு பலரும் ஷாபினூஸ்தான் எகிப்தின் எதிர்கால அரசி என்று எண்ணத் தொடங்கினராம். ராணி நஸ்லீ அவர்கள் கூட, பாரூக்கின் மனப் போக்கைத் தெரிந்து கொண்டு, ஷாபினூஸுக்கு அரபு மொழிப் பயிற்சி யளித்துவர ஏற்பாடு செய்தாராம்.

பாரூக், ஷாபினுஸ், ராணி நஸ்லீ அம்மையார், பாரூக்கின் சகோதரிகள் அனைவரும் ஐரோப்பா முழுதும் சுற்றிப் பார்த்துவிட்டு, ஆங்கில நாடு சென்று, இலண்டன் பார்லிமெண்டு நடவடிக்கைகளையும் நேரில் கண்டு களித்துத் தமது நாடு திரும்பினர். அந்த நேரத்தில் இளவரசர் பாரூக், மன்னர் பாரூக் என அறிவிக்கப் படவேண்டிய சூழ்நிலை உருவாகி யிருந்தது, எகிப்தில்.

முகம்மதிய ஆண்டு கணக்கின்படி 17½ வயதே நிரம்பிய இளவரசர் பாரூக், எகிப்தின் மன்னராக அறி விக்கப்பட்டார். மன்னரது முடிசூட்டு விழா மகத்தான முறையிலே நடை பெற ஏற்பாடுகள் விரைவாக நடந்தன !

மன்னர் பாரூக்கின் முடிசூட்டு விழா நாள் நெருங்கி விட்டது. எகிப்தின் தலைநகரான கெய்ரோ நகரம் கண் கொள்ளாக் காட்சியுடன் விளங்கியது. நகரமெங்கும் பல விதம் விதமான வர்ணத் தோரணங்கள் கட்டப் பட்டன. பலவித வர்ண விளக்குகள் நகரை இரவெல் லாம் அழகு படுத்தின. நாடெங்கும் மன்னரின் புகழை முரசங்கள் ஆர்த்து முழக்கியபடி இருந்தன. ஆடல், பாடல், முதலியவற்றில் மக்கள் தம்மை மறந்து ஈடுபட் டுக் களித்தனர். நாடெங்கும் இருந்து மாந்தர்கள் அணி அணியாகத் தலைநகரில் வந்து குவிந்தபடி இருந்தனர்.

ஈடும் இணையுமற்ற விதத்திலே அலங்கரிக்கப்பட்ட கெய்ரோ நகரம் மன்னரின் முடிசூட்டு விழா நாளன்று

மகிழ்ச்சிப் பெருக்கில் திளைத்துத் துள்ளிக் கொண்டிருந் தது. இராணுவம் அழகுற அணிவகுத்துச் சென்றது நகரத்தின் அழகை மேலும் அழகுபடுத்தியது. மரியாதை குண்டுகள் வானதிர முழக்கமிட்டு வெடித்தன.

மக்களின் வரவேற்புக் கிடையிலே பாரூக் வந்தார். முடிசூட்டிக் கொண்டார். முகம்மதிய வேதமான திருக்குர்ரானைக் கையினுல் தொட்டார். 'அல்லாஹ் வின் மீது ஆணையாகக் கூறுகிறேன். எகிப்து தேசத்தின் அரசியல் சட்டத்தையும்,நீதியையும் மதித்து நடப்பேன். எகிப்து நாட்டின் சுதந்திரத்தைப் போற்றிப் பாதுகாப் பேன்,'' என்று அமைதியுடனும், தெளிவாகவும் மன்னர் பாரூக் கூறினுர்.

மன்னர் பிரான் பேசி முடித்ததும் மக்களின் மகிழ்ச்சிப் பேரொலி கேட்டபடி இருந்தது. எகிப்தின் நல்வாழ்வில் நாட்டமுள்ள மாவீரர் கிடைத்து விட்டார் என்றெல்லாம் எகிப்திய மக்கள் எக்காள மிட்டுக் களித் தனர்.மக்கள் மனதில் பாரூக்கின் மதிப்பும் மரியாதையும் ஆழப் பதிந்து விட்டது. மகத்தான முடிசூட்டு விழா இனிது முடிந்தது. எகிப்தின் மன்னராக பாரூக்கின் ஆட்சி ஆரம்பமாகி விட்டது!

மன்னனுக மணி முடிதரித்த பின்னரும் பாரூக்கின் சிந்தனை ஷாபினுவை விட்டு விலகவில்லை. அவளை எண்ணியபடியே தான் இருந்தான். எப்படியும் ஷாபினு வை மணந்தே தீரவேண்டும் என்ற முடிவு செய்து கொண்டான்.

# 3

ஐரோப்பாவில் அரச குடும்பத்தினருடன் உல்லாசப் பிரயாணம் செய்து விட்டு எகிப்து திரும்பியதும் ஷாபினூஸ் மீண்டும் தனது பள்ளி வாழ்க்கையில் நுழைந்து பாடங்களைப் படித்து வந்தாள்.

எப்படியும் ஷாபினூஸை மனைவியாக்கிக் கொள்ள வேண்டுமென்று துடிதுடித்துக் கொண்டிருந்த பாரூக், தனது எண்ணத்தைக் கட்டுப் படுத்தி வைத்திருக்க முடியாது தவித்தான். ஷாபினூஸிடம் தனது கருத்தை திருமணமுடிவைச் சாகசமாகத் தெரிவித்தான். இளங் குமரி இது கேட்டு மகிழ்ந்தாள். தன் தந்தையிடமும் தனது மனதைத்திறந்து காட்டி விட்டாள்.

மன்னன் மீது காதல் கொண்டு மணத்திற்கு அனு மதி வேண்டி நின்ற மகளை, நீதிபதி ஜூபில்கார் பார்த் தார். 'மகளே! மன்னன் உன்னை விரும்புகிறான். நீயும் அவனை விரும்பலாம். உனது விருப்பத்தின்படி நடக்க உனக்குச் சுதந்திரமும் இருக்கிறது. என்றாலும், தந்தைஎன்ற முறைப்படி நான் உனக்குக் கூறுவது மன்னன்பாரூக்கை மறந்து விடு என்பதுதான். நாடாண் டிடும் மன்னனின் காதலை ஏற்கும் பொறுப்பு நமக்கு வேண்டாம். மன்னனை மணக்க வேண்டாம். அந்த எண்ணத்தை விட்டுவிடு" என்று போதனை புரிந்தார்.

ஷாபினூஸ், தான் மன்னர் பாரூக்கின் மீது காதல் கொண்டிருப்பதாயும், அவனையே மணக்க விரும்புவ தாயும் தெரிவித்தாள்.

நீதிபதி மனங்கலங்கினர். அத்தகைய நிலைமை தனக்கு ஏற்படக்கூடாது என்று ஆண்டவனை வேண்டினர். மகளையும் ஏதேதோ ஆறுதல் மொழிகள் கூறித் தேற்றினர். பின்னர், அவர் தமது விடுமுறை நாட்களைக் கழிப்பதற்காக லெபனுனுக்குப் புறப்பட்டார் அதற்காக போர்ட் செயித் துறைமுகத்துக்குச் சென்று அங்கிருந்து கப்பலேறிச் செல்ல ஏற்பாடுகள் செய்து துறைமுகத்திற்கும் சென்று விட்டார். துறைமுகத்தை யடைந்த அவர்—கப்பலில் ஏறிய நீதிபதி, தமது பிரயாணத்தை விட்டொழித்துத் திரும்ப வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை அதேநேரத்தில் உருவாகிக் கொண்டிருந்தது.

ஷாபினுஸிடம் தனது கருத்தைச் சாகசமாகத் தெரிவித்த பாரூக் பொறுமையிழந்து விட்டான். திடீரென ஒரு நாள் ஷாபினுஸை விரைவில் மணந்ததாக வேண்டும் என்று முடிவு செய்தான். அவ்வளவுதான்! தன்னந் தனியனுக, ஒரே ஒரு போர் வீரனுடன் ஷாபினுஸின் வீடு நோக்கிக் காரில் பறந்தான் பாரூக்.

ஷாபினுஸின் வீட்டைப் பாரூக் நெருங்கியதும், மிகமிக அவசரமாகக் காரிலிருந்து இறங்கி, வேகமாக மாடிப் படிகளிலே தாவிக் குதித்து ஏறினுன். கதவைத் திறந்த வேலையாள் மாடிப்படியில் மன்னனைக் கண்டதும் கருத்துக் குழம்பிக் கலங்கி நின்றுவிட்டான். மன்னன் பாரூக் அதிகாரத்துடன், "ஜுபில்கார் வீட்டில் இருக்கிருரா?" என்று கேட்டான். வேலையாள் 'அவர் வெளியூர் சென்றிருக்கிருர்' என்று பதிலளித்தான்.

ஏமாற்றமடைந்த பாரூக்திருமதிஜாபில்கார் இருக்கிறாரா என்றுகேட்டான். அவரும் இல்லையென்றதும்சலிப்புடன் திரும்பினான். மீண்டும் 'ஷாபினாஸ் இருக்கிறாளா?' என்று கேட்டு அவள் இருப்பது அறிந்ததும் மகிழ்ந்து அவளுடன் பேச விரும்புவதாகத் தெரிவித்தான்.

மன்னன் தன் வீடுதேடி வந்துள்ளான், தன்னைக் கண்டு பேச விரும்புகின்றான் என்ற செய்தி கேட்டதும் ஷாபினாஸ் உள்ளக் களிப்பால் துள்ளினாள். மன்னனைக் காண மாடிப் படிகளில் ஓடோடி இறங்கி வந்தாள்.

பாரூக்—ஷாபினாஸ்! இருவர் கண்களும் ஒன்றை யொன்று கவ்வின. ஒருவரையொருவர் கண்ணாரக்கண்டு, கண்ணிமைக்காமல் கண்டு கண்டு, உண்டு உண்டு களித் தனர். இருவரும் சிறிதுநேரம் வாய்மூடி மௌனிகளாய், பேசாத பதுமைகளைப் போன்று நிலைத்து நின்றனர். உணர்ச்சிப் பெருக்கு, ஆசை வெள்ளம் இருவரையும் பேச முடியாதபடி வாயடைத்துக் கிடக்கச் செய்து விட்டது போலும்.

பாரூக்தான் முதலில் பேச ஆரம்பித்தான்.

"ஷாபினாஸ், உன்னை நான் மணக்க வேண்டும். என்ன சொல்கிறாய்? என்னை மணந்து கொள்ள விருப் பந்தானே" என்று பாரூக் கேட்டான்.

காதலனையே கண் கொட்டாமல் கண்டு களித்துக் கொண்டிருந்த ஷாபினாஸ் சுயநினைவு பெற்றாள். வெட்கம் மகிழ்ச்சிப்பெருக்கு அனைத்தும் சேர்ந்து அவளை மேலும்

பேசா மடந்தையாக்கி விட்டது. மௌனப் புன்னகை புரிந்தாள், நாணினாள். தலைகுனிந்தாள்.

பொறுமையற்ற பாருக் "ஷாபினஸ்! ஷாபினஸ்! என்ன சொல்கிறாய் என்னை மணக்கச் சம்மதமா! சம்மதமா?", என்று கேட்டபடியே இருந்தாள்.

ஷாபினஸ் உணர்ச்சிக் கொந்தளிப்பிலிருந்து தணிந்தாள்; மகிழ்ச்சி வெள்ளப் பெருக்கிலிருந்து மீண்டாள்; தலையை நிமிர்த்தினாள். பெண்களுக்கே சொந்தமான நாணச் சிரிப்பைச் சிந்தினாள். வாய்திறந்து பேசினாள்.

"அரசே! இது தாங்கள் எனக்களிக்கும் பெருங் கீர்த்தி...!" என்றாள்.

பாருக் இடைமறித்து, "ஷாபினஸ், சம்மதம் என்று மட்டும் பதில் சொல்! சொல்!" என்று துரிதப் படுத்தினான்.

மன்னது ஆசைத் துடிப்பைக் கண்ட பெண் நகை முகத்தோடு தன் விருப்பத்தைக் கூறினாள். "தங்களை மணக்க எனக்கு விருப்பந்தான் ஆனால் என் தந்தையின் அனுமதியைத் தாங்கள் பெறவேண்டும்", என்றாள்.

"உன் தந்தை எங்கே" என்று கேட்ட பாருக்கிடம் தந்தை விடுமுறையைக் கழிக்க லெபனானுக்குக் கப்பலேறச் சென்றிருப்பதைக்கூறி, தன் தந்தை திரும்பி வர மூன்று வாரகாலமாகு மென்றும் தெரிவித்தாள்.

பாருக், உடனே தனது மெய்காப்பாளனிடம் ஏதோ செய்திகளைக் கூறி விரைந்தோடிக் காரியமாற்று மாறு கட்டளை யிட்டான். அவன் வெளியேறியதும் பாருக் 'ஷாபினுஸ் மூன்று வாரகாலம் கழித்து உன் தந்தை திரும்பும்வரை என்னால் பொறுத்திருக்க முடியாது. வருகிறேன்' என்று கூறிவிட்டு விரைவாக அரண்மனைக்குச் சென்றான்.

போர்ட் செயித் துறைமுகத்தில் லெபனானுக்குச் செல்வதற்காகக் கப்பலேறிய நீதிபதி ஜுபில்காரை அவரது நண்பர்கள் வழியனுப்பிவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்தார்கள். கப்பலும் புறப்பட்டுக் கொண் டிருந்தது. அச்சமயம் சில அரசாங்க உயர்தர அதிகாரி கள் கப்பலில் ஏறினர். அவர்கள் நீதிபதி ஜுபில்காரின் பயணத்தை ரத்து செய்து, அவரைக் கப்பலை விட்டு இறக்கி, போலீஸ் பாதுகாவலுடன் கெய்ரோவுக்குத் திரும்பச் செய்தனர். இதற்கெல்லாம் அரசாங்க உத் திரவு என்ற ஒரே காரணந்தான் கூறப்பட்டது. வீடு திரும்பியதும் அரண்மனையிலிருந்து டெலிபோன் மூலம் ஜுபில்கரரை அவசரமாக வரும்படி உத்திரவு கிடைத் தது. எதுவும் புரியாது நீதிபதி அரண்மனை சென்று மன்னனது வரவுக்காகக் காத்திருந்தார்.

இதனிடையில், பாருக் தனது தாயாரிடம், தான் உடனே ஷாபினுஸை மணந்தாக வேண்டும் என்று கூறினான். தாயும் சரி என்றாள். ஆனால் மிக இளம் வயதில் திருமணம் வேண்டாம் என்றும், சிலவருடங்கள் கழித்து அதே பெண்ணை மணந்து கொள்வதுதான்

நல்லது என்றும் புத்திமதி கூறினுள். வாலிபமுறுக்கில் மனம் போனபடி நடந்துவிட்டால், மனப்பிடிப்பின்றி பின்னர் அம் மங்கையைக் கைவிட்டாலும் விட்டுவிடக் கூடும் என்றும் எச்சரித்தார். பாரூக் எதையும் செவி கொடுத்துக் கேட்கவில்லை. மனப் போக்கின்படியே உடனே திருமணம் செய்து கொள்வேன் என்று பிடிவாதமாகக் கூறிவிட்டு வெளியில் வந்து, காத்திருந்த நீதிபதியைக் கண்டு, தனக்கு அவரது மகளை மணம் செய்து தரும்படிக் கேட்டான்.

நீதிபதி என்ன சொல்வது? நாடாளும் மன்னன் சொல்லுக்கு மறுப்புக்கூற முடியாது தத்தளித்தார். எனினும் தமது மகள் மிக இளம் வயதினள் என்றும், சில ஆண்டுகள் கழித்து மணம் செய்வதுதான் பொருத்தம் என்றும் விளக்கினர். காதல் பித்து தலைக்கேறியிருந்த பாரூக், கோபம் கொண்டான். தன்னுல் காத்திருக்க முடியாது என்று கண்டிப்பாகக் கூறிவிட்டான்.

1938ல் ஜனவரி மாதம் ஷாபினுஸ் பாரூக்கின் மனைவியாக வேண்டும் என்று கட்டளை யிட்டான். அத்துடன் அவர்களது குல வழக்கிற்கேற்ப 'ஷாபினுஸ்' என்ற பெயரை 'பரீதா' என்றும் மாற்றிவிடுமாறும் தெரிவித்தான். வேறு வழியின்றி நீதிபதி கீழ்ப்படிய வேண்டியதாயிற்று.

மன்னர் பாரூக்கின் மனைவியாக ஷாபினுஸ் நிச்சயிக்கப்பட்டது முதல் அவளது பெயர் பரீதா என்றே வழங்கியது. பாரூக்கிற்கும் பரீதாவிற்கும் மிக ஆடம்பர

மான முறையிலே 1938ம் வருடம் ஜனவரி மாதம் 20ந் தேதியன்று திருமணம் நடைபெற்றது.

கெய்ரோ நகரம் நன்கு அலங்கரிக்கப்பட்டது. எகிப்து மக்கள் அனைவரும் திருமணத்தை வாழ்த்தினர். பாரூக்கின் மந்திரிகள் ஒவ்வொருவரும் முத்துக்களும் விலையுயர்ந்த கற்களும் பதித்த தொழுகைக் குரிய மாலைகளைப் பரிசாக அளித்தனராம். கிறிஸ்வப்பாதிரிமார்கள் பாரூக் திருமணத்தின்போது ஒரு தங்க முடியைத் தங்கள் அன்பளிப்பாகத்தந்தார்கள். உலகின் பல்வேறுநாடுகளிலிருந்து பலஅரிய பொருள்கள் பரிசளிப்பாகவந்தன. ஹிட்லர் ஒரு மோட்டார் காரைப் பரிசாக அனுப்பி வைத்தாராம்.

பாரூக் பரிதாவுக்குத் திருமணப் பரிசிலாக ஒரு விலையுயர்ந்த கழுத்தாரத்தை அளித்தான். அதனை ஒரு கெய்ரோ பத்திரிகை 'அதை ஒரு கல் ஆறு என்று சொல்லுவதைவிட காற்றில் மோதுங் கடல் அலை எனலாம்' என்று புகழ்ந்ததாம்.

நாட்டின் உயர்தர அதிகாரிகளும், கனவான்களும் கூடிய சபையில், பாரூக் பரீதாவைத் திருமணம் செய்து கொண்டான். திருமணம் முடிந்தது. பரீதா எகிப்தின் ராணியானாள். இதன் அறிகுறியாக 101 குண்டுகள் வெடித்து முழங்கின. மணமக்களை மக்கள் வெள்ளம் ஆரவாரத்துடன் வாழ்த்திக் கண்டுகளித்தனர்.

மணமான சிலகாலம் வரையில் பாரூக்கும் பரீதாவும் உல்லாசமாகத்தான் வாழ்ந்தனர். இருவரும் ஒன்று

சேர்ந்து வெளியே செல்வதும், நண்பர்களை வரவேற்று விருந்திட்டு உபசரிப்பதுமாக இருந்தனர்.

நாளடைவில் பாரூக் பரீதாவை அந்தப்புரத்திலேயே தங்கும்படி கட்டுப் படுத்தி வந்தான். மேல்நாட்டு முறையில் பழக்கி வளர்க்கப்பட்ட பரீதா மனம் மிக நொந்தாள். கணவன் மனைவியைக்கண்டித்து, பயமுறுத்தி வைத்தால்தான் மனைவி கணவனுக்கு அடங்குவாள் என்று பாரூக்கின் வாலிப நண்பர்கள் உபதேசம் செய்தனராம். நாடெங்கும் உள்ளூர பாரூக்கும் பரிதாவும் வேற்றுமையுடன் வாழ்வது பற்றிய பேச்சு பரவிக் கொண்டிருந்தது.

இச்சமயம் நவம்பர் மாதத்தில் பரீதாவுக்கு ஒரு குழந்தை பிறக்கப் போகிறது என்ற செய்தி பரவியது— நாடு முழுதும் மகிழ்ந்தது. பாரூக்கும் மகிழ்ந்தான். தனக்கு ஆண் குழந்தை-பட்டத்து இளவரசன் பிறக்கப் போகிறான் என்று பாரூக் பெருமை யடித்துக்கொண்டான். அவனை—பிறக்கப் போகும் இளவரசனைப் படிக்க வைப்பதற்கான திட்டங்களையெல்லாம் அதற்குள்ளாகவே தீட்டி இன்பக் கனவுகள் கண்டபடி இருந்தான். ஆனால் பரீதா மட்டும் தனக்குத் தப்பித் தவறி பெண் பிறந்து விட்டால் நிலைமை என்ன ஆகுமோ என்று கவலைப்பட்டாளாம்.

பரீதா பயந்தபடியே, பெண் குழந்தைதான் பிறந்தது. நவம்பர் 17ந் தேதியன்று இச்செய்தியை யறிந்ததும் பரீதா பதறிக் கலங்கித் துடித்தாள். பாரூக்கும் பெண்

குழந்தை பிறந்தது கேட்டு ஏமாற்றமடைந்தான். மனக் கலக்கம் கொண்டான் அவனது எண்ணக் கோட்டைகள் இடிந்துதகர்ந்து பொடிப் பொடியாகிக்காற்றிலே கலந்து விட்டன.

ஆண்பிள்ளையைப் பெற்றுத் தரவில்லை என்ற காரணங்காட்டி மன்னர் பாரூக், ராணி பரீதாவை விவாக விலக்குச் செய்து விட்டார். திருமண நேரத்தின் போது ராணி நஸ்லீ கூறியது உண்மையாகி விட்டது. பாரூக் தனது நண்பர்களுடன் கேளிக்கைகளில் ஈடுபடுவதிலே காலந்தள்ளி வந்தார். அவர் பரீதாவைத் தள்ளியது எகிப்து மக்கள் மனதில் குமுறிக் கொண்டிருந்தது என்றாலும், மன்னருக்கெதிராக வெளிப்படையாக ஏதும் செய்ய முடியாதவர்களாக இருந்தனர்.

எப்படியோ பாரூக்—பரீதா காதல் வாழ்க்கை ஒரு சில ஆண்டுகளிலேயே—மிக இளம்வயதிலேயே பூத்துக் குலுங்கி காய்த்துக் கனிந்து உதிர்ந்தும் விட்டது. பாரூக்கின் ஆடம்பர, அலங்கார, ஆர்ப்பாட்டக் கேளிக்கைகள் மிதமிஞ்சி நடந்தவண்ணமிருந்தது.

## 4

இன்று மாஜி மன்னராகிவிட்ட பாரூக், மன்னரான போது மக்களின் பெருமதிப்பையும் மரியாதையையும் அளவு கடந்து பெற்றிருந்தார். 'பாரூக்' என்ற பெயருக்கு அரபு மொழியிலே "தீமையிலிருந்து நன்மையைச் சொல்லக் கூடியவர்." என்று பொருள் படுமாம்.

இந்தப் பொருளுக் கேற்ப, ஆரம்பத்தில் மன்னர் பாருக் உண்மையான 'பாருக்' காகவே, தீமையிலிருந்து நன்மையை சொல்லக் கூடியவராகவே", தான் விளங்கி யிருக்கிறார்.

ஆரம்ப காலத்தில் மன்னர் பாருக், மக்களின் குறை களை யறிந்து நல்லாட்சி புரிந்து வந்தார். மன்னரது மனப்பண்பையும், மனிதாபிமானத்தையும் மக்கள் வாயாரா வாழ்த்திப் புகழ்ந்தனர். அஸ்வான், ஜேனு முதலிய மாகாணங்களில் கொடும் மலேரியா நோய் பரவியிருந்தது.

மன்னர் பாருக் மலேரியா பரவியிருந்த இடங் களுக்கு நேரில் சென்று மக்களுக்கு வேண்டிய வசதி களைச் செய்து கொடுத்தார். கிராமங்கள் தோறும் சுற்றினர். ஏழைகளின் வீடுகளை நேரில் கண்டு குறை தீர்த்தார். நாட்டிலே உண்டான பஞ்சத்தின் போது குடிகளின் துயர்துடைத்து மக்களின் பேரன்பைப் பெற்றார். இதனால் ஏழை மக்கள் மன்னரை 'மக்கள் நலம் விரும்பும் மாவீரன் என வாழ்த்தினர்.'

மன்னர் இத்தகு நல்ல காரியங்களில் ஈடுபட்டு இருந்த நேரத்தில் அரசியல் ஆதிக்கமும் பண பலம் படைத்த பாஷாக்கள் மக்களுக்காக பஞ்ச காலத்திலே மன்னரிடமிருந்து வந்த பொருள்களையும், மருந்து வகை களையும் கள்ளச் சந்தையிலே விற்று கொழுத்த லாபம் பெற்று வந்தனர். எனினும் மன்னரின் மதிப்பு மக்க ளிடையேவளர்ந்தே இருந்தது.

நாட்டில் பஞ்சம் ஒழிந்த பிறகு பாரூக், தனது அரண்மனையில் தங்கி ஆனந்த வாழ்வு வாழத்தொடங்கி விட்டார் என்றாலும் பலகாலம் வரையிலும் மக்களால் போற்றப்பட்டே வந்தார். எகிப்திய மக்கள் அப்போது மன்னரது படத்தை எங்கும் தொங்கவிட்டு களித் தனர். கைகூப்பிதொழுத வண்ணம் பூஜித்தும் வந்தனர்.

சினிமாக்களில் எல்லாம் மன்னரைப் பற்றிய வாழ்த்துப் பாடல்கள் ஒலித்தன. இத்தகைய நன்மதிப் புடன் 1944ல் பாரூக் வாழ்ந்தான்.

இதே நேரத்தில் பாரூக்கின் தனிப்பட்ட வாழ்க்கை யைப் பற்றி விதம் விதமான கதைகள் உயர்தர வட் டாரங்களில் பரவி வந்தன.

மன்னருக்குக் கெய்ரோ நகரிலே ஆபீதீன், கூபே என்ற இரண்டு அரண்மனைகள் உண்டு. அலக்ஸாந்திரி யாவில் வாசுத்தீன், மொண்டசா இன்னும் இருவேறு அரண்மனைகள் இருந்தன. மற்றும் இன்சாஸ் என்னு மிடத்தில் வேட்டையாடும் இடமும் அமைத்திருந்தான். வேட்டைப் பிரதேசத்தில் தனியாக ஒரு மிருகக் காட்சி சாலையும், நீச்சல் குளமும் இருந்தன. அதற்கருகிலேயே விமானக் கூடமும் அமைத்திருந்தான்.

அது மட்டுமல்ல! மத்திய கிழக்குப் பகுதியிலேயே மிகச்சிறந்த வெள்ளைநிற பந்தய ஒட்டகங்கள் வளர்க்கப் பட்டு வந்தன. இவைகளுக்காக சிறந்த ஒட்டகத் தொழுவம் வேறு அமைக்கப்பட்டு இருந்தது.

பாரூக் மிருக வேட்டையில் மிகவல்லவன். பலவித விளையாட்டுகளில் மிகமிகத் தேர்ச்சி பெற்றவன். பாரூக்கிடம் இல்லாத பொருள்களே இல்லையென கூறலாம். இரண்டு பெரிய உல்லாசப் படகுகள் இருந்தன. நூறு (100) வித கார்கள் இருந்தன. விலையுயர்ந்த 'ரோல்ஸ் ராய்ஸ்' கார்கள் பாரூக்கிற்காக தனிப்பட்ட முறையில் தயாரிக்கப்பட்டனவாம்.

இத்தாலிய சர்வாதிகாரி முஸோலினி 'அல்பா ரோமியோ' என்ற காரையும் ஜெர்மன் சர்வாதிகாரி ஹிட்லர் 'மெர்சிடிய்' என்ற காரையும் அன்பளிப்பாக பாரூக்கிற்கு அளித்திருந்தனர். விதவிதமான இந்த கார்களை கவனிப்பதற்காக ஏராளமான மோட்டார் ஓட்டிகளும், மெக்கானிக்குகளும் அமர்த்தப்பட்டிருந்தனர்.

பாரூக்கின் சொந்த உபயோகத்திற்கென சிறந்த ஐந்து ஆகாயவிமானங்கள் இருந்தன. ஓராயிரத்திற்கு மேற்பட்ட பட்டு சட்டைகள் இருந்தனவாம். பதினாயிரம் கட்டித் தங்க நாணயங்கள் நூறாயிரம் தபால் தலைகள் மற்றும் பல இலட்சக் கணக்கான கையிருப்பு ரொக்கப் பணமும் அவனிடம் இருந்ததாக கூறப்படுகிறது.

பாரூக்கின் செல்வச் சேமிப்புகள் அனைத்தும் அவரது கூபே என்ற அரண்மனையில்தான் குவிக்கப்பட்டு இருந்தன. அங்கே நெருப்புப் பற்ற முடியாத இருபது அறைகள் உண்டு.

அவைகளிலே சேமிக்கப் பட்டு இருந்த தபால் தலை களின் மதிப்பு மட்டும் அறுபத்தைந்து லட்சம் பவுன் கள். அங்கிருந்த நாணயங்களின் மதிப்பு முப்பத்தைந்து லட்சம் பவுன்களுக்கு மேல் இருந்தனவாம். பல நூறு வண்ண ஓவியங்கள் அரண்மனையை அழகு படுத்தின.

நிர்வாண மங்கையரின் சிலைகளும், சித்திரங்களும் ஏராளம். அவனிடமிருந்த நூல்நிலையம் மிகச் சிறந்தது. நூற்றுக் கணக்கான க்ஷவர பிளேடுகளையும்கூட சேமித்துவைக்கத் தவறவில்லையாம். இந்த கோலாகல வாழ்க்கை அவரைச் சுற்றியிருந்த நண்பர்களுக்கும், பணக்காரர்களுக்கு மட்டுமே ஓரளவு தெரிந்திருந்தது.

உல்லாசப் பொழுது போக்கிற்காக ஏராளமான அழகிய பெண்கள் அவரைச் சூழ்ந்து இருப்பர், 1944ம் ஆண்டில் அவரது உல்லாச கேளிக்கைகளுக்கு உறு துணையாக பிரஞ்சு நடனமாது ஒருத்தி இருந்தாள். அரைகுறை நிர்வாண நீச்சல் உடையிலே அவளைக் கண்டு களிப்பது வழக்கம். இவளுடன் பாரூக் ராசுத் தீன் என்ற தனது காட்டு அரண்மனையிலே காதல் களி யாட்டங்களையெல்லாம் நடத்தினன். நீச்சல் அழகியுடன் நீந்தி விளையாடி மகிழ்ச்சியடைவான் சில நேரம், நீச்சல் உடையில் மணல்மீது புரண்டு கேளிக்கைகள் புரிவதும் உண்டு. பிரஞ்சுநடனக் காரியைத்தவிர பாரூக்கின் காமக் குரங்காட்டங்களுக்கு பலப்பேரழகிகள் பலியாகி வந் தனர். அழகிகளிடம் சலிப்பேற்படும் போது அந்தரங்க நண்பர்களுடன் தனது தனி தியேட்டருக்குச் சென்று பலவிதமேல்நாட்டு சினிமாப்படங்களை தமக்குப் பிடித்த

மானகாட்சிகளை மட்டும் காண்பதுண்டு. மன்னர் எந்த நேரத்தில் சினிமா பார்க்கவந்தாலும் தயாராக படம் போட்டு காட்டுவதற்காக இரவும் பகலும் ஆட்கள் தயாராகக் காத்திருந்தனர்.

இதே போல் துறைமுகத்தில் மன்னரின் உல்லாச மோட்டார் படகுகள் எப்பொழுதும் பிரயாணத் திற்குத்தயராக இருந்தன.

இதோடு கூட, அவரது கடல்பிரயாணத்திற்காக 'மஹ்ரூஸா', 'பய்துல்பிகர்' என்ற இரண்டு உல்லாசக் கப்பல்கள் எப்போதும் பிரயாண ஏற்பாடுகளுடன் தயாராக இருந்தன.

நினைத்தபோதெல்லாம் உல்லாசப்படகுப்பிரயாண மும் கடற் பிரயாணமும் செய்த வண்ணமிருந்தான் பாரூக். அவனுக்கென்று தனி, அரசாங்க வெள்ளி ரயில் வண்டி வேறு இருந்தது. அந்த வெள்ளி ரயில் வண்டியில் பெரிய சமையல் அறையும் அடுத்தபடி அவனது ஆண் நண்பர்கள் தங்கியிருப்பதற்கான தனி அறையும் கட்டப்பட்டிருந்தன. பெண்களுக்கென தனி இடமும் ஒதுக்கப்பட்டிருந்தன. பாரூக் எப்போதும் தனது நண்பர்கள் கூட்டங்களுடனேயே காட்சியளிப் பார்.

வாழ்க்கையின் இன்பங்களையெல்லாம் ஒன்று விடாமல் அனுபவித்து வந்த பாரூக் ஒரு சில நல்ல கொள்கைகளையும், மதசம்மந்தமான கடமைகளையும்

தவறு து மேற்கொண்டு வந்த காரணத்தால் மக்களால் பெரிதும் போற்றப்பட்டு வந்தான்.

தனது கோலாகல வாழ்வுக்காகவும், அளவிட முடியாத சேமிப்பிற்காகவும் பாரூக் பலவித பித்தலாட்டங்களையெல்லாம் செய்து பணம் திரட்டி வந்தான். நாட்டு நிர்வாகத்தைப் பற்றி சிறிதும் கவலை கொள்ளாது உல்லாச வாழ்விலேயே காலங்கடத்தி வந்தான். சூதாட்டாத்தில் சூரனுகி விட்டான். என்றோ நடந்தது என கூறி வரும் அரேபிய நாட்டுக் கதைகளிலே வரும் மன்னர்களைக்கூடத் தோற்கடித்து விடும் அளவுக்குக் களியாட்டம் புரிந்தான்.

எவ்வளவு கேளிக்கைகளிலும் களியாட்டங்களிலும் ஈடுபட்டு இருந்தபோதிலும் பரீதாவை, ஆண் மகவு பெறத் தகுதியில்லை என நினைத்து, விவாக விடுதலை செய்துவிட்ட பின்பு மறுமணம் செய்து கொள்ள எண்ணமிட்டபடி இருந்தான். இரண்டாம் மனைவியாகத் தகுதியுள்ள எகிப்திய இளம் பெண்ணை தனது நண்பர்கள் மூலம்கவனித்துத் தேடி வந்தான்.

## 5

பரீதாவைக் காதலித்தான் பாரூக். மணமுடித்திட நினைத்தான். நினைத்தவுடன் நினைத்தபடி நடத்தி விட்டான். ஆனால் காதலித்துக் கல்யாணம் செய்து கொண்ட மங்கையைத் தனக்கு 'மகன்' பெற்றுத்தரவில்லையென்று விலக்கி விட்டான். இப்போது மீண்டும் பட்டத்து

வாரிசாக ஒரு மகனைப் பெற்றுத்தர, மனைவி வேண்டு மென்று மணமகன் வேட்டையில் ஈடுபட்டிருந்தான்.

பாரூக்கின் படாடோபத்திற்கும், ஆடம்பர அலங் கார வாழ்விற்கும் ஏற்ற இளமங்கையை அவனது அந்தரங்க நண்பர்கள் தேடித் திரிந்தனர்.

இப்படிப்பட்ட வேலையீலீடு பட்டிருந்தவர்களில் நஜீப் என்பவன் ஒருவன். நஜீப் ஒரு நகை வியாபாரி. அவனுக்குக் கெய்ரோவில் ஒருநகைக் கடையும், அலெக் சாந்திரியாவில் மற்றோர் நகைக் கடையும் இருந்தது. நகை வாங்கத் தனது கடைக்கு வரும் எகிப்திய இளம் பெண்களைக் கவனித்து யார் பாரூக்கிற் கேற்றவள் என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தான் அந்த நகை வியாபாரி.

இந்த நகை வியாபாரியின் கடைக்கு ஒரு நாள் ஒருஇளம் வாலிபனும், இளமங்கையும் வந்தனர். அவர் கள் இருவருக்கும் திருமணம் நிச்சயிக்கப் பட்டிருந்தது. இன்னும் ஐந்து நாட்களே அவர்களது மணநாளுக்கு, இடையில் இருந்தது. அவர்கள் தங்கள் திருமணத் திற்காக மோதிரம் ஒன்றை வாங்குவதற்கு வந்திருந் தார்கள். இந்த விவரங்களை நஜீப் கேட்டுத் தெரிந்து கொண்டான்.

நகை வியாபாரி நஜீப் அவர்களைப் பற்றிய எல்லா விவரங்களையும் நன்குவிசாரித்துத்தெரிந்துகொண்டான்.

அந்த வாலிபனின் பெயர் ஸக்கி ஹாஷிம். எகிப்து தேசத்தவர்தான். அவர் அமெரிக்காவிலே பொருளாதரத் துறையில் நன்கு தேர்ச்சி பெற்றிருந்தார். லேக் சக்ஸில் உள்ள ஐக்கிய நாடுகள் சபை அலுவலகத்தில் நல்லதொரு வேலையில் அமர்ந்திருந்தார். அவர் அப்போது தனது தாய் நாட்டுக்குத் திரும்பி வந்து தனது திருமணத்தை முடித்துக்கொண்டு, தமது புதிய மனைவியுடன் லேக்சக்ஸுக்குத் திரும்பப் போவதாகக் கூறினர்.

அந்த இளம் பெண்ணின் பெயர் நாமரின் சாதிக் என்பது. எகிப்து அரசாங்கத் தபால் இலாகாவின் டைரக்டர் ஜெனரலான ஹுசைன் பஹ்மி என்பவரது புதல்விதான் நாரிமன் சாதிக்.

பதினாறு வயதே நிரம்பியிருந்த நாரிமன் சாதிக்கை நகை வியாபாரி ஊடுருவிக் கவனித்தான். அவள் பாரூக் மன்னனின் இரண்டாம் மனைவியாவதற்கேற்றவள் என எண்ணமிட்டான். உடனே மன்னன் பாரூக்கிற்கு இதனை தெரிவித்து விடவேண்டும். எப்படியும் இவளே பாரூக்கின் மனைவியாகவேண்டியவள் என்று நினைத்து விட்டான்,

மணநாள் நிச்சயிக்கப்பட்டு, காதலனுடன் வந்திருக்கும் மங்கையை, மன்னன் மனைவியாகத்தகுந்தவள் என நினைத்து, மன்னனுக்குத் தெரிவித்து, மன்னனுக்கு அவளை மனைவியாக்க வேண்டும் என்ற நச்சு நினைப்பு, கொடிய எண்ணம், அடாத இழிமுறை பாரூக்கின் அந்தரங்க நண்பனுக விளங்கிய அந்த நகை வியாபாரிக்குத் தோன்றியதில் வியப்படைய என்ன இருக்கிறது?

பலவித காரணங்களைக்கூறி அந்த இளங்காதலர் களைத் தனது கடையிலேயே வெகுநேரம் நிறுத்தி வைத்தான். நேரம் அதிகமாகிவிடவே, அவர்களை மறுநாள் மீண்டும் வரும்படிக் கூறினன். அதற்குள் தனது அலெக்சாண்டிரியாவிலுள்ள மற்ருெரு கடையி லுள்ள மிக நல்ல மோதிரங்களை வரவழைத்து வைப்ப பதாகத் தெரிவித்தான். அக்காதலர்களும் உண்மை யென்று நம்பிச் சென்றனர்.

நாரிமன் சாதிக்கும் அவள் காதலனும் வெளியேறி யதும் நகை வியாபாரி அவசரமாக அலெக்சாந்திரியாவில் உல்லாசமாக மீன் பிடித்துப் பொழுதுபோக்கிக் கொண் டிருந்த பாரூக்கிற்கு தான் அவருக்கேற்ற அழகிய மங்கையைக் கண்டு பிடித்து விட்டதாக டெலிபோனில் தெரிவித்து உடனே புறப்பட்டு வரும்படி கூறினன்.

பாரூக், மிகவும் ஆவலோடு, தனது தனிவெள்ளி ரயில் வண்டியில் புறப்பட்டுக் கெய்ரோ வந்து நஜீப்பைக் கலந்து பேசினன். நாரிமன் சாதிக் அன்னியன் ஒரு வனுக்கு மனைவியாவதற்குமுன் தடுத்து நிறுத்தித் தானே மணந்துகொள்ள வேண்டுமென்று முடிவுகட்டி னன். அதற்கான ஏற்பாடுகளைத் துரிதமாகச் செய்ய ஆரம்பித்தான். உடனே நாரிமன் சாதிக்கின் புகைப் படங்கள் அனைத்தையும் எல்லாப் புகைப்படக் கடைகளிலிருந்தும் பறிமுதல் செய்துவரச் செய்தான். படங்களைப் பார்த்துத் தனது எதிர்கால மனைவி என்று தானே தீர்மானித்து விட்ட நங்கையைக் கண்டு களித்தான்.

நாரிமன் சாதிக்கின் திருமணத்திற்கு இரண்டு நாட்கள் முன்னதாக, மணமகனுக்கு நாரிமனை மணம் செய்து தர முடியாது என அறிவித்து விடும்படி நாரிமனின் தந்தைக்கு அரச ஆணை பிறந்தது. அதற்கு மறுப்பேதும் கூற முடியாது அவர் நடந்து விட்டார்.

இரண்டே நாட்களில், காதலித்துக் கருத்தொருமித்த கட்டிளங் குமரியை மணந்து கொள்ளப் போகும் களிப்பில் மூழ்கியிருந்த மணமகன் ஸக்கீஹாஷிம் இந்த எதிர்பாராத செய்தியைக் கேட்டதும் திகைத்தான், திடுக்கிட்டான். நிச்சயிக்கப்பட்ட திருமணம் திடீரென மன்னனது குறுக்கீட்டால், நிலைகுலைந்து விட்டதைக் கண்டு மனமுடைந்து விட்டான். உடனே எகிப்தை விட்டு அமெரிக்காவுக்குப் போய் விட்டான். மன்னனுக்கு எதிராக அந்த இளம் வாலிபன் என்ன செய்து விட முடியும்?

ஆனால் இந்த திடீர்ச் செய்தியைக் கேட்டதும் தன்மீது அணுகுண்டு வீசப்பட்டது போன்ற அதிர்ச்சி ஏற்பட்டதாகத் தனது நண்பரிடம் அவர் தெரிவித்தாராம்.

பாரூக் தனது அதிகார ஆணவத்தால், மாற்றான் ஒருவனுக்கு மனைவியாக நிச்சயிக்கப்பட்ட ஒரு பெண்ணை மணமகனிடமிருந்து பிரித்து, தான் மணம் செய்து கொள்ள முனைந்தான்.

காதலித்துக் கல்யாணத்திற்கும் சம்மதித்து களிப்புடன் இருந்த காதலர்களைத் தனது அரச ஆணை

என்ற அரிவாள் கொண்டு வெட்டிப் பிளந்து விட்டான். தனது ஆசை வெறிக்கு ஏற்றபடி அதிகாரத்தைப் பயன்படுத்தித் தர்பார் நடத்தினான் பாரூக்.

இந்த அடாத, அக்கிரம, ஆணவத் தான்தோன்றித் தாண்டவத்தைத் தட்டிக் கேட்க முடியாத காதலர்கள் பிரிந்தனர், பிரிக்கப்பட்டனர். காதலித்த காதலனை விட்டு காதகன் பாரூக்கை, காமாந்தகாரன் பாரூக்கைக் கட்டாயக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டியதாகி விட்டது, அக்கட்டழகிக்கு!

மக்களது உரிமையைப் போற்றிப் பாதுகாத்திட வேண்டிய மன்னனே செய்த இத்தீயச் செயலை, காட்டு மிராண்டிப் போக்கினைக் கண்டித்திட எவரும் வெளிப் படையாக முன் வரவில்லை. ஆனால் இந்த நிகழச்சி எகிப்திய மக்களிடையே மன்னன் மீது மாற்ற முடியாத மனத்தாங்கலை ஏற்படுத்தி விட்டது.

மன்னனை அன்று பெரிதும் போற்றி வந்த மக்கள் மன்னனைப் பற்றிய குறைகளை நன்கு புரிந்து கொள்ளத் தலைப்பட்டனர். அரசனது பெருமை மறைந்தொழிந்தது. தெரிந்தும் தெரியாதது போல் அன்று அரசனது அக்கிரமங்களையும், ஆடம்பரங்களையும் சகித்து வந்தவர்கள், தங்களுக்குள் அரசனைப் பற்றிக் கேவலமாகப் பேசிக் கொண்டனர்.

அதே நேரத்தில், பாரூக், தனது சுய நலத்திற்காகவும், ஆடம்பரச் செலவுகட்காகவும் நடத்திய அரசியல்

புரட்டுகளும் சிறிது சிறிதாக வெளிப்பட்டு மக்களிடையே பரவத் தொடங்கியது.

நாரிமன் சாதிக்கின் மணத்தைத் தடுத்துக் கட்டாயக் கல்யாணம் செய்து கொள்வது மக்களுக்கு மன வருத்தந் தரும் என்று ஒரு சிலர் பாரூக்கிடம் எச்சரித்தும் பாரூக் விடாப்பிடியாக அவளேயே மணக்க முடிவு செய்தான். மணமாவதற்கு முன்பே அவளைத் தனது செலவில் ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப் பயணம் செய்து வர அனுப்பினன். அரண்மனை வாழ்விற்கேற்ற பழக்கங்களை அவள் அறிந்து வர வேண்டும் என்பதற்காகவே அவள் மேல் நாடுகளுக்கு அனுப்பப்பட்டாள். நாரிமன் சாதிக்கும் சுவிட்சர்லாந்து, பிரான்ஸ் முதலிய நாடுகளைச் சுற்றி வந்தாள். அவள் வெளி நாடுகளில் பல்லாயிரக்கணக்கான பவுன்கள் மதிப்புள்ள ஆடைகளை வாங்கினளாம். ஆடம்பரப் பிரியனை பாரூக்கிற்கேற்ற வாழ்க்கை முறையிலே நாரிமன சாதிக் நன்கு பயிற்றுவிக்கப்பட்டாள் போலும்!

இதே நேரத்தில் பாரூக்கும் இத்தாலிக்குச் சென்று உல்லாசமாகப் பொழுது போக்கினன்.

இத்தாலியில் ரேவீரா நகரில் அறுபது நண்பர்களுடன் ஆடல்பாடல்களில் காலம் கடத்தினன். அவனது உடைகளை அவ்வப்போது தனி ஆகாய விமானம் கெய்ரோ சென்று கொண்டு வந்ததாம். ஆர்பாட்ட ஆடம்பரத்திற்கும் ஒரு வரம்பின்றி நடந்து வந்தான் பாரூக்.

பாரூக் சூதாட்டத்தில் மிகச் சூரனாக விளங்கினானும். இரவெல்லாம் கண் விழித்து ஹோட்டல்களிலே கணக்கின்றிப் பெரும் பொருள் வைத்துச் சூதாடிக் காலம் கழிப்பது வழக்கமாம். சூதாட்டத்தின் போது பாரூக்கை எதிர்த்துப் பணம் கட்டப் பலரும் திகைப்பார்களாம். ஒரு முறை சூதாட்ட மேஜையில் பாரூக்கின் முன்னர் குவிந்து கிடந்த பணக்குவியலின் அளவைக் கண்டு அவருடன் சூதாடிக் கொண்டிருந்த ஆங்கிலேயன் ஒருவன் மலைத்து— மிரண்டு, மயங்கி மரணமடைந்து விட்டதாகக் கூட ஒரு செய்தி கூறப்படுகிறது.

இவ்வளவு கவலையற்று ஒரு நாட்டின் மன்னன் வாழ்ந்து வந்தான். இதைப் பற்றிய செய்திகள் வெளி நாட்டுப் பத்திரிகைகளில் பிரமாதமாக வெளி வந்து கொண்டிருந்தன. பாரூக் தனது சூதாட்டச் செய்திகளும், களியாட்ட விவரங்களும் எகிப்திற்கு எட்டி, எகிப்து பத்திரிகைகளில் வெளிவந்து விடா வண்ணம் தணிக்கை செய்து வந்தானும். இருந்தும் இவைகளெல்லாம் எப்படியோ எகிப்து மக்களிடம் சென்று பரவித்தான் வந்தன. எகிப்திலிருந்து வெளி நாடு சென்று திரும்பும் பிரயாணிகள் மூலம் மன்னனது கேளிக்கைகள் மக்களிடையே பரவின. சில பிரயாணிகள் வெளிநாட்டுப் பத்திரிகைளில் பாரூக் பற்றி வெளியான பத்திரிகைச் செய்திகளைக் கத்தரித்துச் சென்று எகிப்தில் காட்டினர்.

சிறுகச் சிறுகப் பரவின பலவிதச்செய்திகளைக் கேட்டு மன்னரைத் தெய்வமென எண்ணிப் போற்றி வந்த ஏழைக்குடிகள் மன்னர்மீது மட்டற்ற வெறுப்படைந்தனர். சில பத்திரிகைகளும் மன்னரது தகாத போக்கினை எடுத்துக் காட்டிக்கண்டிக்க ஆரம்பித்து விட்டன.

பாரூக் தனது உல்லாசப் பயணத்தை முடித்துக் கொண்டு எகிப்து திரும்பினார். நாரிமன் சாதிக்கும் தனது மேல் நாட்டுப் பயணத்தை முடித்துத் தனது நாடு திரும்பினாள். நாரிமன் புதிய நாரிமனாக, நவநாகரீக மிக்க ஆடம்பர நாரிமனாகவே மாறியிருந்தாராம்.

பாரூக்—நாரிமன் திருமணத்தை நாட்டு மக்கள் விரும்பவில்லை—எதிர்ப்பார்கள் என்பதைப் பாரூக் தெரிந்திருந்தும் அவளையே மணம் செய்து கொள்ள ஏற்பாடுகள் செய்தான். மக்களின் கருத்துக்கு மன்னன் மதிப்பளிப்பதா என்று நினைத்தான் போலும்.

பாரூக்—பரீதா திருமண விழாவினைவிட மிகமிக அதிக ஆடம்பரத்துடன் நாரிமன் சாதிக்—பாரூக் திருமணம் நடைபெறத்திட்டமிட்டான். நகர வீதிகள் பல விதத் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டன. மணமக்களின் உருவப் படங்கள் விதம் விதமான வண்ண விளக்குகளால் அழகு படுத்தப் பட்டுத் தொங்க விடப்பட்டன. மிக அதிகமான ஆடம்பரத்துடன் நாரிமன் சாதிக்கைப் பாரூக் திருமணம் செய்து கொண்டான்.

பாரூக் தனது திருமணத்தின்போது, மக்களது எதிர்ப்பை மாற்றி மறந்திடச் செய்யப் பலவிததான

தருமங்களைச் செய்தான். விரும்பிய மக்களுக்கெல்லாம் வகை வகையான விருந்துகள் கிடைத்தன. மதுவகைகளும் இலவசமாக வழங்கப்பட்டது.

பாருக்கின் இரண்டாம் திருமணத்தின் போதும் ஏராளமான பரிசுகள் வந்து குவிந்தன. காலஞ்சென்ற ஆங்கில மன்னர் ஆரும் ஜார்ஜ் ஆறு வெள்ளி மெழுகு வத்திகளைப் பரிசாக அனுப்பினர். எகிப்து மந்திரி சபையினரால் வைரங்கள் இழைக்கப்பெற்ற ஆறு தங்கக் காப்பிக் கோப்பைகள் அன்பளிப்பாக வழங்கப் பட்டன. மேலும் இன்னவர்கள் என்று தெரிவித்துக் கொள்ள விரும்பாத எகிப்தியர் ஒருவர் பர்மிங்ஹாம் கம்பெனியிலிருந்து, 35 ஆயிரம் பவுன்கள் மதிப்புள்ள தேநீர்ப்பாத்திரமும், கட்டித் தங்கத்தால் செய்யப்பட்ட தட்டு ஒன்றையும் வாங்கித் தனது மரியாதைக் காணிக்கையாக மன்னனுக்கு அளித்தார்.

பாரூக் குடிகளின் ஆத்திரத்தையும், வெறுப்பையும் மட்டுப்படுத்த பல வழிகளிலும் எண்ண மிட்டான். தனது திருமண நினைவாகத் தனக்குச் சொந்தமான மூவாயிரம் ஏக்கர் நிலங்களை ஏழை விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிப்பதாகத் தெரியப்படுத்தினன். இதோடு ஏழை விவசாயிகட்கு ஒவ்வொருவரின் நிலத்திலும் இரண்டு அறைகள் உள்ள வீடு ஒன்றையும் தானே கட்டித்தருவதாக உறுதியளித்தான். மற்றும் ஒரு பசுவும், ஒரு கழுதையும், தேவையான எருவும் விதைகளையுங் கூடத்தர ஏற்பாடு செய்வதாக அறிவித்தான். அலெக்சாந்திரியாவில் ஒரு முறை பாரூக் தனது சட்டைப்

பையிலிருந்து 65 ஆயிரம் பவுன்களை எடுத்து ஏழைக ளுக்குத் தானம் செய்தான். பாரூக் எவ்வளவுதான் தான தருமங்களைச் செய்தபோதிலும் மக்களிடையே ஏற்பட்டிருந்த மனக் கசப்பை மாற்றிவிட முடியவில்லை.

காதலித்த கணவனால் திடீரெனக் கைவிடப்பட்ட பரீதாவின் வாழ்க்கையை மக்கள் மறக்கவேயில்லை. அதே போல், வேறொருவனுக்கு மணமகளாக நிச்சயிக்கப்பட்ட நாரிமன்சாதிக், பாரூக்கின் அதிகாரத்தின் மூலம் அவனது மனைவியாகிவிட்ட கொடுமையையும் எண்ணிக் குமுறிக் கொண்டே இருந்தனர். பாரூக்கினிடம் பண உதவி பெற்ற சில பத்திரிகைகள் மன்னனைப் பலபடப் புகழ்ந்து எழுதி வந்தும் நிலைமை மாறவேயில்லை. 'நாரிமன்சாதிக் தமது ராணியாவதற்குத் தகுதியற்றவள்' என்ற எண்ணம் மக்களிடையே பெரிதும் பரவிக்கொண்டே இருந்தது.

அரசாங்க உயர்தர அதிகாரிகள் பெருமளவில் கைக்கூலி பெற்றனர் என்று மக்களால் குற்றஞ்சாட்டப் பட்டனர். பாரூக்கின் அந்தரங்க, அநாகரீக ஆடம்பர வாழ்க்கையைப்பற்றிப் பத்திரிகைகள் பலவிதங்களில் தாக்கி எழுதிக்கொண்டே இருந்தன. இவைகளைப் பற்றி யெல்லாம் பாரூக் ஒரு சிறிதும் கவலைப்படாது தனது புதிய மனைவி நாரிமனுடன் ஐரோப்பாவில் உல் லாசப் பிரயாணம் செய்யப் புறப்பட்டு விட்டான்.

பாரூக்—நாரிமன் சாதிக் புது மணமக்கள் தங்கள் நண்பர் கூட்டத்துடன் செய்த உல்லாசப் பயணத்தில்

4

ஏராளமான பணம் மிதமிஞ்சி அள்ளியள்ளி வாரியிறைக்கப் பட்டுச் செலவிடப் பட்டதாம். நாளொன்றுக்கு ஓராயிரம் பவுன்களுக்குமேல் செலவாயிற்று. இந்த உல்லாசப் பயணம் 1951ம் ஆண்டு ஜூன் மாதம் 7ந் தேதி யன்று துவங்கியது.

புது மணமக்களான பாரூக்கையும் நாரிமன்சாதிக்கையும், மற்றும் 60 பேர்களடங்கிய நண்பர் கூட்டத்தையும் ஏற்றிக் கொண்டு அவர்களது உல்லாசக் கப்பல் புறப்பட்டு விட்டது, முதலில் சிசிலித் தீவிலுள்ள தோர்மினோ என்ற நகரில் ஆறு நாட்கள் தங்கினர். இதற்காக மட்டும் 900 பவுன்கள் செலவாயிற்று. பின்னர் கெப்ரித் தீவுக்குச் சென்று கெய்ஸர் அகஸ்டஸ் ஹோட்டலில் தங்கினர். கிரேஸிபீல்டின், கடலின் கீதம் (The song of the sea) என்ற நீச்சல் இடத்திற்குச் சென்றார்கள். இதற்காக மட்டும் 2000 பவுன்கள் பாழாயின. இந்த முறையில் பல ஆயிரம் பவுன்களைப் பெருவாரியாகச் செலவு செய்த வண்ணம் பாரூக் கோஷ்டியினர் ரப்பல்லோ, வெனிஸ், சுவிட்சர்லாந்து ஆகிய இடங்களுக்கெல்லாம் சென்றனர்.

மாண்டிகார்லோவில் தங்கி யிருந்தபோது ஒரு நாள் பாரூக் நாள் முழுதும் சூதாடிக் கொண்டே இருந்தார். ராணி நாரிமன்சாதிக் இடையில் கூப்பிட்டனுப்பியுங்கூட எழுந்து செல்லாமல் சூதாடிக் கொண்டேயிருந்தார். இவருடன் அன்று சூதாடிய அத்தனைபேரும் தமது கையிலிருந்த பணமத்தனையும் தோற்றுத் தோற்றுத் திரும்பத் திரும்பப் பாங்கியிலிருந்து பணம் கொண்டு வரச்செய்து

ஆடினார்கள். அன்று மட்டும் பாரூக் சூதாட்டத்தில பதினையாயிரம் பவுன்கள் சம்பாதித்து விட்டார். இதன் விளைவால் அங்கு ஒரு பாங்கியில் இவருடன் சீட்டாடிய வர்கள் ஒரே நாளில் பெருந்தொகைகளை வாங்கியதின் விளைவாக அந்தப் பாங்கியே முறிந்து விட்டதாகக் கூறப் படுகிறது.

பாரூக் சில தடவைகளில், ஒரு முறைக்கு 20 ஆயிரம் பவுன்களைக்கூடப் பந்தயமாகக் கட்டிச் சூதாடியிருக்கின் ருனும். வெற்றி பெற்ருல் துள்ளிக் களிப்பதும், தோல்வி யடைந்தால் ஒரு சிறு ஏக்கப் பெருமூச்செறிவ தும் மீண்டும் பந்தயம் கட்டுவதும் அவனுக்கு மிகமிகச் சாதாரணசம்பவம் எனப்படுகிறது.

பாரூக் பல மாதங் கழித்துத் தனது உல்லாசப் பய ணத்தை முடித்துக்கொண்டு எகிப்து திரும்பினர். அது வரை பாரூக் எகிப்து நாட்டின் நிர்வாகம் பற்றியே அக் கரை யேதுமின்றியே காலங் கழித்திருந்தார். ஆனல் எகிப்திற்குள் நுழைந்ததும் அவரது முன்னுள் பகைவ ரான நஹாஸ் பாஷா பிரதமராக மிகவும் சக்தி வாய்ந்து அமர்ந்திருப்பதைக் கண்டு திடுக்கிட்டான்.

நஹாஸ் பாஷா அப்போது எகிப்தின் பிரதமராக இருந்தார். அவரது ஆட்சியிலே பலவித அலங்கோலங் கள் நடந்தன. அவரது மனைவியின் குடும்பத்தினர், அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி ஏராளமான பணத்தைக் கொள்ளையடித்தனர் என்று நாடெங்கும் பலத்த எண்ணம் பரவி மக்கள் எதிர்த்துக் கிளர்ச்சி செய்ய முனைந்திருந்தனர்.

இச்சமயம் நஹாஸ் பாஷா மக்களது கவனத்தை உள்நாட்டு விஷயங்களிலிருந்து மாற்றி வேறு பக்கம் திருப்பிவிட்டு தமது குற்றச்சாட்டுகளிலிருந்து தப்பித்துக்கொள்ளத் தக்க திட்டம் வகுத்திருந்தார்.

அதன்படி 1936ம் வருடத்தில் எகிப்தின் பாதுகாப்பிற்காக, ஆங்கிலப் படைகள் 1956ம் ஆண்டுவரை இருக்கவேண்டும் என்று பிரிட்டனுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை ரத்து செய்துவிட்டதாக அறிவித்தார். அதோடு எகிப்திய மன்னரே, சூடானின் மன்னர் எனவும் பிரகடனப் படுத்தினுர். ஆங்கிலேயர்மீது வெறுப்புற்றிருந்த எகிப்திய மக்கள் நஹாஸ் பாஷாவைப் புகழ்ந்து பாராட்டத் தலைப்பட்டு விட்டனர்.

நஹாஸ் பாஷாவும் தனது திட்டம் நிறைவேறியதைக் கண்டு களிப்படைந்தார்.

இந்த நேரத்தில்தான் பாரூக் எகிப்து திரும்பி, நஹாஸ் பாஷாவின் செல்வாக்குப் பெருகி யிருப்பதைக் கண்டு மனம் புழுங்கிக் கொண்டிருந்தான். அரசனுக்குள்ள அதிகாரத்தைக் கொண்டு பிரதமரை உடனே நீக்கிவிட முதலில் எண்ணமிட்டான். அப்படிச் செய்தால் மக்களின் மகத்தான எதிர்ப்பையும் அதனல் ஏற்படும் குழப்பங்களை சமாளிக்கவேண்டும் என்ற கவலை தோன்றியதும் அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டான்.

இந்த நிலையில், இராணுவத்தைத் தன்பக்கம் சேர்த்துக்கொள்ள பாரூக் பெரிதும் பாடுபட்டு இராணுவத்தி

னிடம் அதிக அன்பு காட்டத் தொடங்கினன். நாட்டில் திடீரென்று, குழப்பங்கள் நடந்தால் தன்னை அதனின் றும் பாதுகாத்துக்கொள்ள இராணுவம் பெரிதும் உப யோகப்படும் என்று பாரூக் எண்ணமிட்டான்.

இராணுவத்தில் வயதானவர்களை நீக்கினன். இளம் வாலிபர்களுக்கு உத்தியோக உயர்வு கொடுத்தான். இராணுவத்தின் சம்பளத்தைஉயர்த்தினன். இதுபோல் இராணுவத்திற்குப் பல நன்மைகளையும், சலுகை களையும் கொடுத்து வந்த மன்னனது உள்ளெண் ணத்தை இராணுவம் புரிந்து கொண்டது.

சில காலத்திற்குப்பின் கெய்ரோ நகர வீதிகளில் பெருங்கலகம் நடைபெற்றது. பிரிட்டிஷ்காரர்கள் வீதி களிலே நாதியற்று விரட்டி விரட்டி அடிக்கப்பட்டனர். சிலர் கொல்லப்பட்டனர். ஆங்கிலேயரின் காரியாலயங்கள் கொளுத்தப்பட்டன. இந்த நேரத்தில் பாரூக் இராணு வத்தையனுப்பி அமைதியை நிலை நாட்டினன். இராணுவமும் தனது சக்தியின் அளவை, பலத்தின் பெருக்கினை நன்கு அறிந்து கொள்ள அச்சம்பவம் நல்ல தொரு வாய்ப்பாக அமைந்து விட்டது.

தனக்குப் பிடிக்காத பிரதமர் நஹாஸ் பாஷாவை ஒழித்துக் கட்டுவதற்காக, தனது தன்னல எண்ணம் நிறைவேறுவதற்காக பாரூக்கினல் போற்றி வளர்க்கப் பட்ட இராணுவமே இன்னும் சிறிது காலத்திற்குள் தனக்கெதிராகக் கிளம்பி தன்னைநாடு துறக்கச் செய்து விடும் என்பதை கற்பனை செய்து கூடப் பார்த்திருக்கத் தான் மாட்டான் மன்னன் பாரூக்.

இராணுவத்தினரைத் தட்டிக் கொடுத்து, உள் நாட்டு விஷயங்களில் அவர்களைத் தலையிடச்செய்து அவர்களைத் தனக்கு எதிரான கருத்துக் கொண்டு புரட்சி செய்திடக்கூடிய நிலைமையைப் பாரூக் தன்னிலை மறந்து தானே உருவாக்கி வந்தான்.

போர்க்களங்களைப் பற்றியும், போர்ப்பயிற்சிகளையும், படைக் கருவிகளைப் பற்றியுமே கவனித்துக் கிடக்கவேண்டிய இராணுவத்தை அரசியலில் இழுத்து நுழைத்துக் காரிய மாற்றச்செய்தது மன்னன் பாரூக்கே தான். அவனது இந்தத்தற்காப்புநடவடிக்கையும், சந்தர்ப்பசாகசமுமே, பின்னர் அவனது பயங்கர வீழ்ச்சிக்கு, வித்திட்டது—அடிப்படை மிகப்பலமான எதிர்ப்புச் சக்தியுமாகி விட்டது.

தட்டிக் கேட்க எவருமில்லை யென்று தர்பார் நடத்தி வந்து, தன்னிஷ்டம் போல் கண்டபடி கேளிக்கைகள் நடத்திவந்த பாரூக், நாரிமன் சாதிக்கை அடாத வழியில் மணந்தது முதல் தனது செல்வாக்கினைப் பெரிதும் இழந்துகொண்டே வந்தான். பாரூக்கின் பிள்ளைப் பருவப் பண்புகளும், ஆட்சி பீடமேறிய உடன் செய்த செயல்களையும், அதனுல் மக்களிடம் அவனுக்கிருந்த பெருஞ் சிறப்பையும், இன்று ஏற்பட்டுள்ள சீரழிந்த நிலைமையையும், எண்ணிப் பார்ப்போரது உள்ளம் மிகமிகக் கலக்கமுறும்.

## 6

கற்பனைக்கு எட்டாத அளவிலே களிப்புக் கடலில் மிதந்து வாழ்ந்து வந்த இன்றைய வாழ்க்கையையும்,

அவனது கட்டற்ற கீழ்த்தரமான காட்டுக் கொள்கை களையும் கண்டு எகிப்து மக்கள் மனமிக வேதனையடைந் தனர். பாரூக்கின் சென்றகால நல்வாழ்வு பற்றிய நினைவுகள் தோன்றச் செய்தது. இளம் வயதில் பாரூக் கொண்டிருந்த பண்பட்ட பாங்கான பண்புகளை அவர் களால் எண்ணுதிருக்க முடியவில்லை. ஏன்? மன்னனுக முடி சூட்டிக்கொண்டதும் மக்களின் குறைதீர்க்கப்பாடு பட்டதையும் எண்ணி ஏக்கமடைந்தனர்.

ஆம்! இன்று எகிப்திய மக்களால் கேவலமாகக் கருதப்பட்டு, இழித்தும், பழித்தும் பேசப்பட்டு வரும் பாரூக்கின் ஆரம்பகால வாழ்வு அவனை நல்லதொரு மனிதனுகவே — மனிதாபிமான மிக்க மன்னனுகவே எடுத்துக் காட்டியது.

மிக இளம் வயதிலேயே பாரூக் மக்களுடைய இலட்சிய இளவரசனுக விளங்கினுன். பாரூக்கின் பிள்ளைப் பருவம் எதிர்காலத்திலே அவன் மிகச் சிறந்த புத்திசாலியாகவும் திறமை மிக்கவனுகவும், கருணை யுள்ளம் படைத்தவனுகவும் நன்னெறி தவருத நேர்மை யாளனுகவும் விளங்குவான் என்ற எண்ணத்தையே எல் லோர்க்கும் உண்டு பண்ணியது. ஆனுல் அவனது பிற் கால வாழ்வு இதற்கெல்லாம் எதிரிடையாகத்தான் அமைந்து விட்டது.

பாரூக்கின் தந்தையான மன்னர் 'புவாத்' தனது மகனை மிக இலட்சியபுருஷனுகவே வளர்த்தார். 1920ம் ஆண்டு எகிப்தின் வாரிசாக பாரூக் பிறந்தபோது

புவாத் மன்னர் "F" என்னும் எழுத்து தனக்கு அதிர்ஷ்டத்தைக் கொண்டு வந்ததாக எண்ணினர். அதனுலேயே தனது மகனுக்கு F என்ற எழுத்தில் ஆரம்பிக்கும் பாரூக் (Farook) என்ற பெயரிட்டார். இந்த நம்பிக்கையின் படியே பாரூக்கின் சகோதரி களுக்கும் முறையே "பவ்ஜியா", "பாய்ஜா", "பாய்கா", "பாத்தியா" என்று பெயரிட்டார்.

தந்தை கையாண்ட இந்தப் பழக்கத்தை பாரூக்கும் பின் பற்றினர். தனது முதல் மனேவியின் பெயரான "ஷாபினுஸ் ஜுல்பில்கார்" என்ற பெயரை, "பரீதா" என்று மாற்றினர். "ஷாபினுஸ்" என்ருல் "தூய்மை யான ரோஜா" என்று பொருள் படும். "பரீதா" என்பதற்கு ஒன்றே ஒன்று" என பொருள் படும். ராணி பரீதாவுக்கு மூன்று பெண் குழந்தைகள்பிறந்தன. தந்தையின் வழக்கத்தைப் பின் பற்றி தனது மூன்று குமாரிகளுக்கும் "பெரியா", "பௌஜியா", "பாத்தியா என்று பெயரிட்டார்.

பரீதாவுக்குத் தனது பதிமூன்று ஆண்டு மண வாழ்க் கையில் பரீதாவுக்கு ஆண் குழந்தைகளே இல்லாத காரணத்தால் அவளே விவாக விடுதலே செய்துவிட்டார். விலக்கப்பட்ட ராணி "பரீதா" மீண்டும் தனது பழைய "ஷாபினுஸ்" என்ற பெயரையே வைத்துக் கொண்டார்.

"F" என்ற எழுத்தை முதலாகக்கொண்ட பெயரிடம் தன் வாழ்வில் வெற்றிகாணுத காரணத்

தாலோ, என்னவோ பாரூக் தனது இரண்டாம் மனைவி நாரீமன் சாதிக்கின் பெயரை மாற்றவில்லை.

இளம் வயதில் பாரூக் மிக அழகாகவும் உற்சாக மாகவும் இருந்தான். முறுவல்பூத்த முகத்துடன் எப்போதும் காட்சியளித்த அவனிடம் மற்றவரை வசீகரிக்கும் மாபெரும் சக்தி இருந்தது. புவாத் மன்னர், பாரூக்கிற்கு மிகச் சிறந்த ஆசிரியர்களைக் கொண்டு கல்வி போதித்தார். மேல்நாட்டு மொழிகளைக் கற்றுத்தர ஒரு பிரஞ்சுப் பேராசிரியரை நியமித்தார்.

இளமையில் மிகச் சுறுசுறுப்பாக விளங்கிய பாரூக், பலநாட்டு மொழிகளையும் கற்முன். இன்று அவனுக்கு ஏழுமொழிகளில் பேச எழுதத்தெரியும் இளமையில் பாரூக் தாயைத் தெய்வமென எண்ணித் துதித்தார். அன்று பாரூக்கினுல் இப்படிப் போற்றப்பட்டதாய் "நஸ்லீ" இன்று ஹாலிவுட்டுக்கருகில் தனது இரண்டு பெண்களுடன் வாழ்ந்து வருகிமுராம்.

சில சமயங்களில் பாரூக் எல்லைமீறி எதையும் அடங்காப்பிடாரித் தனமாகவும் செய்தான். ஒரு சமயம் "ஆபிதீன்" அரண்மனையிலுள்ள பூச்செடி களைக் காலால் மிதித்துத்துவைத்துச்சேதப்படுத்தினுன். இதனைக் கண்டித்த தோட்டக்காரனை சுடுமொழிகளால் கடுமையாகத் திட்டினுன். பாரூக்கிற்கு அப்போது பத்து வயதே இருக்கும். என்முலும் அவன் தோட் டக்காரனைப் பார்த்து "இரு! இரு!! என் தகப்பனுர் சாகட்டும்; அப்போது நான் மன்னராக வருவேன். அப்போது உன்னை ஒரு கை பார்த்துக் கொள்கிறேன்"

என்று கூக்குரலிட்டான். இதையெல்லாம் பலகணி வழியாகப் பார்த்துக் கேட்டு கவனித்துக் கொண்டிருந்த அவனது தந்தை அவனை அழைத்து பலவித புத்திமதிகளைக் கூறினார். அன்றுமுதல் இளவரசன் பாரூக் பிறரது மனது புண்படும்விதம் பேசுவதில்லை.

இளவரசனது கழுத்துப் பட்டையைப் பொருத்தும் ஊசியொன்று, குதிரைமீது சவாரி செய்யும்பொழுது காணாமற் போய்விட்டது. கீழே விழுந்து கிடந்த அதனை, குதிரைக்காரப் பையன் விற்றுக்கொண்டிருந்த போது போலீசார் அவனைக் கைது செய்தனர். இதையறிந்த புவாத் மன்னர் அப்பையனைக் கடுமையாகத் தண்டித்தார். தனது கவனக் குறைவால் ஏற்பட்ட இக்கொடுமை கேட்டு பாரூக் மிக வருந்தினான். அன்று முதல் எந்தவிதமான நகைகளையும் அணிவதில்லை என்று முடிவு செய்து அதன்படியேயும் நடந்து வந்தான்.

இளம் வயதிலேயே பலதிறப்பட்ட வாழ்க்கையிலே ஈடுபட்டவர்களுடன் பழகிவரும் வாய்ப்பைப் பெற்றிருந்தான். நாட்டின் நாலாவித இடங்களிலும் சுற்றி, நாட்டு மக்களுடன் நெருங்கிப் பழகினான். எப்போதாவது பார்லிமெண்டுக்குச் சென்று அதன் விவாதங்களை கவனிப்பதும் வழக்கம்.

சாரணர் இயக்கத்தில் பாரூக் பெரும்பங்குகொண்டு வந்தான். சாரணர் தலைவனாக தனது பதினான்காம் வயதில் நியமிக்கப்பட்டான். அந்த வயதிலும் அவன்

மிக உயரமாகவும், அழகாகவும், முடுக்காகவும் காட்சி யளித்தான்.

பாரூக்கின் பதினைந்தாம் வயதிலே அவன் இங்கிலாந்துக்குப் பயணமானான். "ராசுத்தீன்" அரண்மனை வழியாகக் காரில் புறப்பட்டு அரசாங்கத் துறைமுகத் துக்குச் சென்று கப்பலேறிய இளவரசனை மக்கள் பெரிதும் வாழ்த்தி வழியனுப்பினர்.

இளவரசனை கோலாகலமாக வாழ்த்தி வழியனுப்பப் பட்ட இதே இடத்தில்தான் அவனது பின் வாழ்விலே பல கோலாகல களியாட்டங்களை நடத்தினான். அவனை வாழ்த்தி வழியனுப்பிய அதே மக்கள் அதே இடத்தில் பல ஆண்டுகளுக்குப் பிறகு வெறுத்துத் தூற்றி நாட்டை விட்டே வெளியேறிடும் கடைசி பயணத்திற்கு காரணமாவார்கள் என்று பாரூக் எண்ணியிருக்க முடியாது.

இங்கிலாந்தில் தங்கிய பாரூக், காலஞ்சென்ற ஆறும்ஜார்ஜ் மன்னரின் ஆசிரியராக விளங்கிய "சர் லூயி கிரீக்" என்பவரிடம் பயின்றான். அரசிளங்குமர னுக்குத் தேவையான பழக்க வழக்கங்கள் அவனுக்குக் கற்பிக்கப்பட்டன. அவனுக்கு மிக முக்கியமாக போதிக்கப்பட்டு வந்தவைகள்; விஞ்ஞானப் பயிற்சி. இராணுவப் பயிற்சி, பிறமொழிப் பயிற்சி, உலக வர லாறுகள், அரசியல் முதலியனவாகும். பாரூக் தனக்கு விருப்பமான உலக வரலாற்று ஏடுகளிலே அதிகக் கவனம் செலுத்தி வந்தான். பாரூக்கிற்கு குத்துச்

சண்டை, டென்னிஸ் போன்ற விளையாட்டுகள் அதிக மாகப் பிடித்திருந்தது.

பாரூக் தன்னிச்சையாக வெளியே சுற்றி சாதாரண மக்களுடன் தொடர்பு கொண்டு, அவர்களது நிலையை அறிந்து கொள்ளும் வாய்ப்புக்கு இடமளிக்கவேண்டும் என்றும் அவனுக்குப் பயிற்சி தந்து வந்த ஆசிரியர் களுக்கு உத்திரவு தரப்பட்டது. இலண்டன்மா நகரிலே இவருக்குப் பிடித்தமான, இவருடனேயே இருந்து பழகி வந்த நண்பர் ஒருவர் இருந்தார் என்றால், அவர் “வேல்ஸ்” இளவரசராகத்தான் இருக்கும் என்பதில் ஐயமில்லை. ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் தனது பக்கிங்ஹாம் அரண்மனையில் ஒருநாள், பாரூக்கிற்கு விருந்தளித்தார் என்றால், பாரூக்–வேல்ஸ நட்பு எந்த முறையில் இருந் திருக்கும் என்பதை வாசகர்கள் நன்குணருவர்.

ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் சவ ஊர்வலத்தில் மக்களின் கவனத்தையெல்லாம் கவர்ந்தவர் ஒருவர் இருந்தா ரென்றால் அவர் பாரூக்காகத்தான் இருக்கும். காரணம் அந்த சவ ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களிலேயே மிக உயரமாக, கருப்பு அங்கி அணிந்து சிகப்பு குல்லாயுடன் கம்பீரமாக நடந்து சென்ற காட்சிதான்.

இங்கிலாந்திலே நற்பெயருடன் பள்ளி வாழ்க் கையை நடத்தி வந்த நேரத்தில்தான், 1936ம் ஆண்டு ஏப்ரல் திங்களில் தனது தாய் நாடான எகிப்திலிருந்து துக்ககரமான செய்தியொன்று தந்தி மூலம் கிடைத்தது. அந்தச் செய்தி, பாரூக்கிற்கு அவனது தந்தையின்

மரணச் செய்தியைத் தாங்கி வந்தது. தந்தை மாண்டார் என்றதும் இளவரசன் பாரூக் மனமுடைந்துகலங்கினுன். அப்போது அவனுடன் அவனது தாய் நஸ்லீ அம்மையும் இருந்தார். இருவரும் உடனே புறப்பட்டனர்.

இளவரசன் பாரூக் அப்போது பிரிட்டிஷ் மன்ன ராகிவிட்ட தனது நண்பர் எட்டாம் எட்வர்டுடன் சிறிது நேரம் பேசி விடை பெற்ருர். நண்பர்களாக விளங்கிய அந்த இரு இளவரசர்களும் அப்போது தமது தந்தையர் இறந்துவிட்ட காரணத்தால் மன்னராக விளங்கினர். இந்த இரு நண்பர்களில் எட்வர்டு தன் காதலுக்காக உடனே முடிதுறப்பார் என்பதும், பாரூக்கும் தனது அத்து மீறிய காதல் விளையாட்டுகளால் முடிதுறக்க நேரிடும் என்பதைப் பற்றிய சிந்தனை யாருக்குத் தான் தோன்றியிருக்கும் ?

எட்டாம் எட்வர்டு, தான் காதலித்த காதலியையே மணப்பேன், அதற்காக மன்னர் பதவியைத் துச்ச மெனத் தள்ளி விடுகிறேன் என்று தனது காதலையும் கடமையையும் பெரிதென மதித்துப் பட்டம் துறந்தார். ஆனுல் பாரூக்கோ காதலித்த கட்டழகியைக் கைவிட்டு, காமக்களியாட்டங்களில் ஈடுபட்டு மக்களின் வெறுப் புக்கு ஆளாகிப் பட்டந் துறந்திட நேர்ந்தது. இந்த இரு நண்பர்களின் வாழ்க்கை விசித்திரந்தான் என்னே !

பாரூக் தனது தாயுடன் எகிப்து திரும்பினுன். அவனை அலிமெஹர் வாழ்த்தி வரவேற்ருர். மக்களும் திரண்டு வந்து தங்களது எதிர்கால மன்னனுக்குத் தங்கள் மரியாதையைச் செலுத்தினர்.

மாண்ட புவாத் மன்னர், மக்களிடையே, பாரூக்கைப் போன்று மதிப்பிழந்து வாழவில்லை. ஆனால் அவர் எகிப்திய அரசியல் கட்சிகளுடன் அடிக்கடி கொள்கை காரணமாக சச்சரவு செய்து கொண்டிருந்தார். குறிப்பாக முன்னேற்ற எண்ணம் படைத்திருந்த 'வப்து' கட்சியினருடன் அவருக்கு வெறுப்பு மிகமிக அதிகம். இந்த நேரத்தில் எகிப்து திரும்பிய இளவரசர் பாரூக்கை பல்கலைக் கழக மாணவர்களும், சாரணர் குழுக்களும் வரவேற்று நல்லுரை புகன்றனர். இவருக்கு அன்று எகிப்திய இளைஞர் தந்த மரியாதையைப் பற்றிப் பாராட்டி லண்டன் டைம்ஸ் பத்திரிகையும் எழுதியது.

மன்னனாக முடி சூட்டிக்கொள்ள வேண்டிய இளவரசன், முடிசூட்டு விழா நடப்பதற்கிடையில்தான் ஆரம்பத்தில் கூறப்பட்ட சுவிட்சர்லாந்துப் பயணம் நடைபெற்றது. அப்போது தான் தன்னுடன் பாரூக், ஷாபினூஸ் ஜூபில்கார் உடன்வர வேண்டுமென்று பிடிவாதம் செய்து அழைத்துச் சென்றான்.

பாரூக் மன்னனாக முடிசூட்டிக் கொண்டதும் செய்த பிடிவாதமான செயல் ஷாபினுஸைப் 'பரீதா' எனப் பெயரிட்டு மணந்ததுதான். இத்திருமணம் மக்களால் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்ளப்பட்டது. பாரூக், மன்னனான ஆரம்பத்தில் மக்களின் நலனில் மிக்க அக்கறை கொண்டு, நேரில் யாவற்றையும் கவனித்தான் என்பதை முன்பே எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. மன்னனை அப்போது மக்கள் தங்களைப் பாதுகாத்திட வந்த மாவீரன் என்றே மதித்து மரியாதை செய்தனர். இதற்

குத் தகுதியான முறையில்தான் பாரூக்கும் நடந்து வந்தான். ஆயிரக் கணக்கான பவுன்களை ஏழை மக்களின் நலனுக்காகச் செலவு செய்தான். நாடெங்கும் அதிக மான ஆரம்பப் பாடசாலைகளைக் கட்ட உத்திரவிட்டான். ஏழைகளின் துயர் துடைத்திட பாரூக் எங்கும் நேரில் தானே முந்திச் சென்று காரியமாற்றி வந்தான். அதே நேரத்தில், எகிப்திலிருந்து அரசியல் பிடியை விட்டு விலகியும், தமது படைகளை எகிப்திலே பெரிதும் வைத்திருந்த ஆங்கிலேயரையும் வெறுத்து வந்தான்.

1942ல் பிரிட்டிஷ் ஆதரவாளரான நஹாஸைப் பிரதமராக நியமிக்கவேண்டும் அல்லது எகிப்து மன்னன் பதவியைத் துறந்தாக வேண்டும் என்று மிரட்டிய பிரிட்டிஷ் தூதுவரிடம் பாரூக் பணிந்து விட்டான். இரண்டாம் உலக யுத்த நேரத்தில் நடந்த இந்த நிகழ்ச்சியின்போது, பாரூக் பணிந்தாலும், அந்தத் தூதுவரைப் பார்த்து "தூதுவரே, தாங்கள் இதற்குப் பின்னர் தக்க படி பதில் சொல்ல நேரிடும்" என்று எச்சரித்தானும்.

இந்த எச்சரிக்கையைப் பற்றி எகிப்திய மக்கள் மட்டில்லா மகிழ்ச்சி கொண்டு மன்னனைப் போற்றினர்.

உலக யுத்த நெருக்கடி மிக்க அந்த நேரத்திலே, அரண்மனையைச் சுற்றிலும் டாங்கிப் படைகளைக் கொண்டு முற்றுகையிட்டுக் கொண்ட பிரிட்டிஷ் தூதரின் கட்டளைப்படி நடக்கவேண்டிய நிர்ப்பந்தம் பாரூக்கிற்கு ஏற்பட்டது என்றாலும் பின்னர் தனக்குப் பிடிக்காத பிரதமரை நீக்கி விட்டான்.

மன்னனின் இந்தச் செய்கையை எகிப்திய இராணுவம் மனதார ஒப்பவில்லை. பிரிட்டிஷார் தங்கள் மன்னரையும், நாட்டையும் கேவலப்படுத்தி விட்டதாகவே நினைத்தனர். ஒரு சில மேலதிகாரிகள் தங்கள் எதிர்ப்பைத் தெரிவிப்பதற்காக ராஜினமா செய்யவும் தயாரானார்கள். அவர்களில் ஒருவர்தான் எகிப்தின் மன்னரது நாடு கடத்தலுக்கு முக்கியஸ்தரான காப்டன் நஜீப்* (இந்த நஜீப் இராணுவத் தலைவர். நாரிமன் சாதிக்கை அரசனுக்குக் காட்டிய நகை வியாபாரி நஜீப் வேறு என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம்.)

இந்த ராஜினமா பற்றிய பேச்சுக்கள் அப்போது பெரிதாகத் தெரியவில்லை. எப்படியோ, மக்களின் மனதில் பாரூக்கின்மீது நல்லெண்ணம் தோன்றியிருந்தது. தங்கள் மன்னரது படங்களை மிக உயர்ந்த இடத்தில், எல்லா முக்கிய இடங்களிலும் அழகுறத் தொங்கவிட்டுக் களித்தனர், கைகூப்பி வணங்கியும் வந்தனர்.

இவ்வளவு நற்பெயருடன் நல்வாழ்வு வாழ்ந்த மன்னன் பாரூக் நாளடைவில் தீயவழிகளிலேயே எப்போதும் ஈடுபட்டு, நாட்டு நிர்வாக முறைகளை மறந்து கிடந்தான் என்பதை சிறுகச்சிறுக மக்கள் உணர்ந்தபோது கொதித்தனர்! பரீதாவைப் பாரூக் விவாக விடுதலை செய்தபோது இந்தக் கொதிப்பு அதிகமாகியது. பின்னர் மன்னனது அந்தரங்க வாழ்வு பற்றிய வகைவகையான வதந்திகள் உலவியபோது மேலும் வெறுப்பு வளர்ந்தது. அடுத்து நாரிமன் சாதிக்கை, அவளுக்கென்று

நிச்சயிக்கப்பட்ட மணமகனை விட்டுப் பிரித்து மணந்து கொண்டதும், அதன் பின்னர், மேல்நாடுகளிலே செய்த உல்லாசக் கேளிக்கைகளும் மக்களுக்கு மன்னனிடம் மட்டற்ற மனக் கசப்பை வளர்த்து விட்டன.

இதைத் தவிர, மன்னர் அரசியல் நிர்வாகம் பற்றிக் கவலையற்றுக் கிடந்தமையால் ஆட்சி முறையில் பலவிதக் கேடுகள் நிறைந்து கிடந்தன.

அரசனுடன், ஆடம்பரப் பிரியர்களும், மக்கள் விரோதிகளுமே நிறைந்திருந்தனர். அவர்களது தீய போதனைகளைக் கேட்டு பாரூக் அடிக்கடி தேவையற்ற பிரச்சினைகளிலெல்லாம் தலையிட்டு அரசியலை அலைக் கழித்து வந்தான். இத்தகைய தான்தோன்றித் தலையீடுகளால் எகிப்தில் சுமார் ஏழு மாத காலத்தில் நான்கு மந்திரி சபைகள் மாறித் தீர வேண்டிய கேவல நிலைமை ஏற்பட்டது என்பதை உலகம் நன்கு அறியும்.

முன்னேற்றக் கருத்துக்களைக் கொண்ட 'வப்து'க் கட்சியினர் மக்களிடம் மிக்க செல்வாக்குப் பெற்று விளங்கினர். அக்கட்சியினரைப் பெருவாரியாகக் கொண்ட எகிப்து பார்லிமெண்டை பலகாலமாகக் கூட்டாமலேயே விடப்பட்டது. இதைத் தவிர, உயர் தர இராணுவத் தலைவர்களாக தனது உறவினர்களை நியமித்தான். இது இராணுவத்தினருக்குப் பிடிக்க வில்லை.

இவ்விதம் மக்களை மறந்து வாழ்ந்த மன்னனிடம் பொது மக்கள் முழு வெறுப்படையத் தொடங்கிய நேரத்தில்தான் பாரூக், தந்திரமாக இராணுவத்தின்

மூலம் தனது நிலையைப் பாதுகாத்து வரத் தொடங்கினன். ஆரம்பத்தில், மன்னனிடம் இராணுவமும் முழு நம்பிக்கை வைத்து நடந்து வந்தது. நாளடைவில் மன்னனின் தகாத போக்கினைக் கண்டு இராணுவமும் எதிர்த்துப் புரட்சி செய்திடும் நிலைமை வளர்ந்து வந்தது.

## 7

ஊதாரித்தனமான செலவுகள் செய்து மக்களை மறந்து வாழ்ந்த மன்னனின் கொடுங்கோன்மை எத்தனை நாளைக்குத்தான் தொடர்ந்து நடந்திட முடியும்? பாரூக்கின் பகட்டான படாடோப வாழ்விற்கும் முடிவு நாள் நெருங்கியபடி இருந்தது. இதனைப் பாரூக் ஓரளவு உணர்ந்தும் உணராதவன்போல், தனது அதிகாரவெறி கொண்டு எதையும் சாதித்துவிடலாம் என்ற மமதையுடன் வாழ்ந்து வந்தான். சகிக்க முடியாத கொடுமையை எகிப்து அடக்க முடியாது எப்படியோ அடக்கிக் குமுறிக் கொண்டேயிருந்தது.

இதனிடையில் 1952ம் ஆண்டு ஜனவரியில் நாரிமன் சாதிக் ஒரு ஆண் மகனைப் பெற்றுள். பாரூக்கின் பலவருடக் கனவான ஆண்மகன்—பட்டத்து இளவரசன் பிறந்து விட்டான். இதனைப் பாரூக் மிகவும் கோலகலமாகக் கொண்டாட்டம் நடத்திய ஆறு மாதங்களுக்குப் பின்னர் பாரூக் தனது மகனைப் பட்டத் தரசனுக ஒப்புக் கொண்டு, முடிதுறந்து நாட்டை விட்டே வெளியேறிவிட வேண்டிய கட்டம் விரைந்து வந்து விட்டது.

மன்னனுக்கு எதிரான சூழ்நிலை மக்களிடம் பெரு மளவில் வளர்ந்திருந்த நேரத்திலேயே, மன்னன் கடைசியாக நம்பிக்கொண்டிருந்த இராணுவத்திலும் மன்னன் மீது மாறாத மனக்கசப்பு தோன்றி விட்டது. இதற்குக் காரணம் பாரூக் மன்னனே தான். மன்னன் தனது துரோக புத்தியை, தனது சுயநலச் சுரண்டல் வேலையை இராணுவத்தினிடம் காட்டி விட்டான். தனது பலத்தையும், சக்தியையும் நன்கு உணர்ந்திருந்த இராணுவம் உடனே விழித்து ஜெனரல் முகம்மது நஜீப் என்ற இராணுவத் தலைவரின் கீழ் ஒன்றுப்பட்டு மன்னனை எதிர்த்துப் புரட்சி செய்திடத் துடித்தது.

பாலஸ்தீனத்தில் இஸ்ரவேலர்களுடன் நடந்த போராட்டத்தில் எகிப்திய படைகள் பெரும் பெரும் தோல்விகளை யடைந்தன. இதற்கு முக்கிய காரணம் மன்னன் பாரூக் என்பதை எகிப்து மக்களும் இராணுவமும் தெரிந்து கொண்டனர்.

பாரூக்கின் தந்தையான புவாத் அரசர், இத்தாலிய நாணயங்களை ஏராளமாக வாங்கி வைத்திருந்தார். இத்தாலியில் பின்னர் ஏற்பட்ட அரசியல் மாறுதல்களால் அவைகளுக்கு மதிப்புப் பெரிதும் குறைந்து விட்டது. இந்த நாணயங்கள் பாரூக்கிடம் அப்படியே முடங்கிக் கிடந்தன.

இந்த இத்தாலி நாணயங்களுக்குப் பதிலாகத் தன்னிடம் பல ஆண்டுகட்கு முன்னர் தயாரிக்கப்பட்ட யுத்தக் கருவிகளைத் தருவதாக இத்தாலி இரகசியமாகப் பாரூக்கிற்குச் செய்தியனுப்பியது. இதுதான் சமயம்

என்று பாரூக் இத்தாலிய நாணயங்களைக் கொடுத்து விட்டு அந்தப் பழைய, உபயோகமற்ற யுத்ததள வாடங்களை இத்தாலியிட மிருந்து பெற்று அவை களை எகிப்து இராணுவத்திற்குக் கொழுத்த இலாபத் தில் விற்றுவிட ஏற்பாடு செய்தார்.

இந்த மோசடி வியாபாரத்தில் மட்டும் பாரூக் இரண்டரை கோடிக்குமேல் பொருள் சம்பாதித்திருக் கிறுனும். உதவாக்கரை ஆயுதங்களை யேந்தி எகிப்திய வீரர்கள் பாலஸ்தீனம் சென்று யூதர்களுடன் போரிட்டனர். இதன் விளைவு என்ன ?

எங்கு சென்று போரிட்டாலும் எகிப்திய படை தோல்வியைத்தான் கண்டது. இத்தாலியிலிருந்து வந்த ஆயுதங்கள் பயனற்றனவாகக் கிடந்தன; துப்பாக்கி களும், குண்டுகளும் வெடிக்கவே யில்லையாம்!

பயனற்ற படைக் கருவிகளையும் வெடிக்காத குண்டு களையும் வைத்துக் கொண்டிருந்த எகிப்திய படைகள் தோற்காமல் என்ன செய்யமுடியும்!

பணத்திற்காக, தனது சுயநலச் சுரண்டலுக்காகத் தனது தாயகத்தின் படைகளை, பயனற்ற படைக் கருவி களுடன் போர்க்களம் புகுந்து, தோல்வி கண்டு இறந் திடும் நிலைமையை ஒரு மன்னன் ஏற்படுத்திய, மிகமிகக் கேவலமான, கீழ்த்தரமான, மகா, மகா மட்ட ரகமான கயமைச் செயலை, மாபெருந் துரோகச் செயலைச் செய்த மன்னனை, இராணுவம் எப்படிச் சகித்துக் கொண்டு சும்மா விட்டுவிட முடியும்!

மன்னனது சுய இலாப வேட்டையினுல், எத்துணை எகிப்திய உயிர்கள் மரணவாயிலைத் தழுவிக் கொண்டன! தோல்வியின் காரணமாக எகிப்தின் மதிப்பு எவ்வளவு நகைப்பிற்கிடமாகி விட்டது என்பதைப் பற்றிய கவலையேதுமின்றிக் களியர்ட்டங்கள் நடத்தி வந்த மன்னனை ஒழித்திட இராணுவ வீரர்கள் வீறிட்டுக் கிளர்ந்தெழுந்தனர்.

உதவாக்கரை ஆயுதங்களைப் பற்றிய முழு உண்மையை ஆய்ந்தறிய அமைக்கப்பட்ட நீதி மன்றத்தையும், தனது ஆணவ அதிகார வெறி கொண்டு தலையிட்டு சரிவர நடவாதபடி செய்தான் பாரூக். இதன் பிறகு உண்மை வெளிப்பட்டுவிட்டது. தங்களது உயிரைப் பணயம் வைத்து தாயகத்தின் மதிப்பைப் பாதுகாக்கப் போர்க்களம் புகுந்த வீரர்களைக் கொன்று குவித்துவிட்டு, தாய் நாட்டின் மானத்தை விலைகூறி விற்றுப் பணமாக்கிப் பகட்டானவாழ்வு வாழ்ந்த பாரூக்மன்னனை எதிர்த்து ஜெனரல் முகம்மது நஜீப் இராணுவத்தினரை ஒன்று சேர்த்தார்.

நஜீப்பின் முயற்சிக்கு நாட்டுமக்களும் பேராதரவு தந்தனர், இந்த நிலையில் 1952ம் ஆண்டு ஜுலை மாதம் இருபத்து மூன்றும் தேதி இரவு மன்னனுக்கு ஆதரவாக இருந்து, உண்டு கொழுத்து மக்களை அட்டையைப் போல் உறிஞ்சி வந்த அதிகாரிகள் பலர் இராணுவத்தால் கைது செய்யப்பட்டனர். சக்தி வாய்ந்த இராணுவத்தை எதிர்த்து, அடக்கி அதிகாரம் செய்திட மன்னன் பாரூக்கினுல் முடியவில்லை.

பாரூக்கின் நிலைமை நிர்க்கதியாகி விட்டது எனினும், நஜீப், மன்னனை ஏதும் செய்யவில்லை. மன்னனை அணுகி சில நிபந்தனைகளைக் கூறினார். அதன்படி பாரூக் மன்னர் அலி மஹர் பாஷாவைத் தற்காலிக பிரதமராக்கி அரசியல் அதிகாரத்தை அவரிடம் ஒப்படைத்துவிட வேண்டும் என்பதும், பாரூக் சட்டவரம்புக்கு உட்பட்ட மன்னனாக விளங்க வேண்டும் என்பதும் முக்கியமானவைகள்.

பாரூக் சந்தர்ப்பத்திற்கேற்றபடி சாகசமாக நடந்து கொள்வதில் மிகத் தேர்ந்தவன். பாரூக் உடனே தடையேதும் கூருது இராணுவத் தலைவன் விடுத்த நிபந்தனைகளை அப்படியே ஏற்று நடப்பதாக உறுதியளித்து விட்டான். நஜீப்பும் மகிழ்ச்சியுடன் திரும்பி விட்டார்.

பாரூக், நஜீப் வெளியேறியதும் தனது வஞ்சக, தந்திர வேலைகளைத் தொடங்கி விட்டான். அன்று வரை எல்லா அதிகாரங்களையும் படைத்து ஆனந்தமாகவாழ்ந்த வாழ்வு, அழிந்தொழிவதை அவனல் சகிக்க முடியவில்லை போலும். தனது நாட்டையும் நாட்டு மக்களையும் அப்படியே ஒப்படைப்பதாகவும் நஜீப்பை மட்டும் ஒழித்து விடும்படி பிரிட்டிஷ் தூதுவரை அழைத்து கெஞ்சியதாகவும், அதற்கு அத்தூதர் மறுத்துவிட்டதாகவும் சில பத்திரிகைகளில் செய்தி வந்தது.

மக்கள் நலன் கருதி மன்னனது அதிகாரங்களைக் குறைத்திட முனைந்த மாவீரன் நஜீப்பின் கோரிக்கைகளை உதறி யெறிந்து, நாட்டையே அன்னியருக்கு அடகு வைத்தேனும் தனது சுகபோக வாழ்வைப் பாதுகாத்திட முனைந்த மன்னனை உடனே அழித்தாக வேண்டும்,

ஒழித்தே தீரவேண்டும் என்று மக்கள் ஆத்திரப்பட்ட னர். இராணுவத்தினர் சீறிச் சினந்தனர். சில அதி காரிகள் பாரூக்கை உடனே சுட்டு வீழ்த்தி எகிப்தின் களங்கத்தைப் போக்க வேண்டும் என்று துடித்தனராம்.

நாட்டைக் காட்டிக் கொடுத்திடும் நயவஞ்சக நரி, நாட்டாண்மைப் பீடத்தில் இனியும் இருத்தல் கூடாது, கூடவேகூடாது என்று பலரும் கொதித்தெழுந்து, மன்னனை உடனே ஒழித்துக் கட்டும்படி ஜெனரல் நஜீப்பை மன்றாடிக் கேட்டபடி இருந்தனர்.

பாரூக் செய்த துரோகச் செயல்கள் மக்களை அள வுக்கு மீறி ஆத்திர மூட்டிவிட்டது. நிலைமை கட்டுமீறி விட்டது. இந்த நேரத்தில் முகம்மது நஜீப் தலையிட்டு தக்கதொரு முறையைத் தெரிந்தெடுத்து மக்களைச் சமா தானம் செய்தனுப்பினர்.

மன்னன் செய்த அடாத செயல்களுக்காக மன்ன னைச் சுட்டுவிடுவதற்கு நஜீப் விரும்பவில்லை. இராணு வத் தலைவர்தான் என்றாலும் அவர் சமாதானத்திலும், அமைதியான வழியில் காரியமாற்றும் பண்பிலும் நம் பிக்கை கொண்டவர். எனவே அவர் மூன்று பெண்க ளுக்கும், ஒரு ஆண் மகனுக்கும் தந்தையாக விளங்கிய பாரூக் மன்னனைக் கொன்றுவிட விரும்பவில்லை.

நஜீப்பும், புதிய பிரதமர் அலீமஹர் பாஷாவும் முக் கியமானவர்களும் சேர்ந்து ஒரு இரவு முழுதும் இது பற்றித் தீவிரமாக ஆலோசித்தனர். மன்னனைக்கொன்று

விடவேண்டும் என்றுதான் பெரும்பான்மையோர் வாதா டினர் என்றாலும் நஜீப் அதனை மறுத்துப் பேசினார். பிரதமரும் அதனையே ஆதரித்தார். இறுதியில் பாரூக்கைக் கொல்வதில்லை என்று முடிவு செய்தனர். பாரூக் தூக்குத் தண்டனையிலிருந்து விடுவிக்கப்பட்டாலும், இனியும் எகிப்து மன்னராக விளங்குதல் தகாது! தகாது! என மக்கள் மன்றம் ஆரவாரித்தது,

பலத்த ஆலோசனைக்குப் பிறகு பாரூக் மன்னனிடம் இரு நிபந்தனைகளைத் தந்து அதன்படி நடக்கவேண்டுமென்று கட்டளை யிட்டனர்.

அந்நிபந்தனைகளின்படி முதலில் பாரூக் தனது பட்டத்து இளவரசனுக்காக (அவரது மகனுக்காக) மன்னர் பதவியை உடனே துறந்தாகவேண்டும். இரண்டாவதாக அன்று மாலை ஆறு மணிக்குள், மன்னன் பாரூக் எகிப்து நாட்டைவிட்டு வெளியேறிவிட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.

1952, ஜுலை 26ந் தேதி பகல் பன்னிரண்டு மணிக்கு இந்த நாடு கடத்திடும் கட்டளை பாரூக்கிற்குக் கொடுக்கப்பட்டது.

நாடாண்ட முடிமன்னனை நாட்டு மக்கள் இன்னும் ஆறே ஆறு ம்ணி நேர அவகாசத்திற்குள்ளாகத் தனது முடி துறந்து நாட்டை விட்டே வெளியேறக் கட்டளையிட்டு விட்டனர். மன்னன் வாழ்வு எத்துணை வேதனையானது... !

# 8

மன்னன்! இந்தவார்த்தைக்கு அதன் ஆரம்ப காலத்தில் என்னென்ன பொருள்கள் கையாளப்பட்டதோ! அதை நாம் அறியோம். ஆனால் மனித மனம் படைத்த, நாகரிகவாழ்வு நடத்தும் எவரும் மன்னன் என்ற வார்த்தைக்கு மக்களின்பாதுகாவலன்—வழிகாட்டி—தந்தை என்பதாகத்தான் பொருள் கொள்வர் என்பது உறுதி!

மன்னன் என்பவனை, மனித சமுதாயம், நாகரிக வாழ்வு வாழத் தலைப்பட்டு, குடும்பம்—குடும்பத் தலைவன், சமூகம் — சமூகத்தலைவன், சமுதாயம்—சமுதாயத் தலைவன், நாடு—நாட்டுத்தலைவன் என்ற முறையிலே ஒரு குறிப்பட்ட நிலப்பரப்பில் வாழ்ந்திடும் நாட்டின் மக்களின் நல்வாழ்விற்கும் தாழ்விற்கும் பொறுப்பாளியாக்கப்படும் பெரும் பதவியாளன் என்று தான் கருதி வருகின்றது.

குடும்பத்தின் ஒரு மித்த கூட்டு வாழ்விற்கும் வளர்ச்சிக்கும், வளமான வாழ்க்கை முறைக்கும் எப்படி ஒரு குடும்பத்தலைவன் பொறுப்புடன் நடந்து கொள்கிறானோ, அதுபோலவே ஒரு நாட்டின் மன்னனும் தனது நாட்டுக் குடிகளின் தொண்டனாக, நாட்டுமக்களை எல்லாவிதத் துறைகளிலும் முன்னேற வைத்திடும் பேரறிவாளனாக, உணவு, உடை, இருப்பிடம், தற்பாதுகாப்பு, கலை, அறிவு, ஆற்றல் ஆகிய அத்தனைத் தேவைகளையும் மக்களிடையே பகிர்ந்தளிக்கும்,

பங்கீட்டதிகாரியாகவும், பாதுகாவலனாகவும், அணைத்து ஆதரவளித்திடும் தந்தை, தாய் போன்றும் தன்னைக் கருதி ஒழுகிடவேண்டும்.

மன்னனைப் பற்றிய எண்ணம் மக்களிடம் இப்படித்தான் இருக்கும். ஆனால் மக்களைச் சட்டதிட்டங்கள் வகுத்துக் கட்டுப்படுத்தி ஆண்டிடும் மன்னன், நிலை பெற்றிடும் மனிதன், மன்னனாகி விட்டதும் பெரும்பாலும் தானும் ஓர் மனிதன் தான் என்பதையே முதலில் அடியோடு மறந்து விடுகின்றான்.

மக்களைத் தன்னிச்சைப்படி அடக்கவும், ஒடுக்கவும் அதிகாரம் செய்திடவும் தனக்குக் கிடைத்திட்ட ஒரு ஆயுதமென மன்னன் பதவியை நினைத்து விடுகிறான். இத்தகைய எண்ணம் உதித்து விட்டதும், மன்னன் மக்களின் தொண்டன் என்ற நிலைமைமாறி, மன்னன் மக்களின் தெய்வம், தொழுகைக்குரியவன், அடிபணிந்து வணங்கிடவேண்டியவன் என்று கருதப்படும் அவல நிலை ஏற்பட்டு விடுகின்றது.

இத்தகைய அவல நிலைதான் மன்னன் என்று வாழ்ந்திடும் வகையான நிலை பெற்றுள்ளவர் பலரின் உள்ளத்திலும் ஊறிக்கிடக்கின்றது. மன்னன் இல்லாத, குடியாட்சியற்ற மற்ற நாடுகளில் ஆட்சிப் பொறுப்பிலுள்ள, மந்திரிகள், சர்வாதிகாரிகள், ஜனாதிபதிகள் என்போரும் இந்த மனப்பண்போடு நடந்திட முற்படும் கோரநிலைமை காலப்போக்கில் ஏற்பட்டு விடுகின்றது.

உலக வரலாற்றிலே மேற்கண்ட முறையில் மக்களை ஆண்டிடும் மன்னர்கள், மந்திரிகள், சர்வாதிகாரிகள் எனப்படும் அனைவரும் இறுதி வரையில் தங்களது அதிகாரத்தைத் தொடர்ந்து நடத்தியதாக என்றும் காண்பதற்கில்லை. கொடுங்கோல் புரிந்த கோமான்கள் அனைவரும் கொடுமைகட்கே இலக்காகிமாண்டு மடிந்து சீரழிந்ததைத் தான் உலகவரலாறு தெள்ளத்தெளிய எடுத்துக் காட்டுகின்றது.

ரோம சாம்ராஜ்ஜியத்தை ஆண்ட மன்னர்கள் முதல், அன்னிய நாடுகள் பலவற்றைப் படையெடுத்து வெற்றி பல கண்ட செங்கிஸ்கான், பிரஞ்சு நாட்டு நெப்போலியன், லூயி போன்ற மன்னர், ஜெர்மன் நாட்டுக்கெய்ஸர், ஹிட்லர், ரஷியநாட்டு ஜார் இத்தாலிய சர்வாதிகாரி முசோலினி ஆகிய அத்தனை பேர்களும் இறுதியில் தங்களது பேராசைக் கோட்டைகள் தகர்ந்து மக்களது உரிமைகள் பாதுகாக்கப் பட்டதைத் தானே காணமுடிந்தது?

இத்தனை மன்னாதி மன்னர்களையும், சக்திவாய்ந்த சர்வாதிகாரிகளையும் படித்தறிந்த எகிப்துமன்னன்பாரூக் அவர்களது அழிவுப்பாதையிலேயே இறுதிவரை நடந்து வந்தான் என்பதை எண்ணும்போது கொஞ்சம் திடுக்கிட்டுத்தான் போகிறது.

எகிப்து மன்னன் பாரூக், தனது இறுதி எல்லைக் கோட்டினை, ஆட்சித்துறவினை நிச்சயித்துக் கொண்டு, நாட்டை விட்டு வெளியேறி விடவேண்டுமென்று

மக்களால் கட்டளையிடப் பட்டபோது, 'சரி' என ஒப்புக் கொண்டான். ஆனால் உடனே அமெரிக்க நாட்டுத் தூதுவரை அழைத்து எகிப்தை அவரிடம் அடகு வைப்பதாகவும் தன்னைப் பாதுகாக்கும் படியும் வேண்டினன்! மன்னனாகவே வாழ்வதற்காகக் கடைசி நேரத்திலும் அவன் மக்களுக்குத் துரோகம் செய்யத் தான் தயாராக இருந்தானே தவிர, மக்களின் கருத்தறிந்து மனிதப்பண்புடன் நடக்கவில்லை.

அமெரிக்க நாட்டுத் தூதுவரும் பாரூக்கின் விருப்பத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. கண்டதே காட்சி! கொண்டதே கோலம்! என்று கவலையற்ற வாழ்வு வாழ்ந்து வந்த பாரூக் பட்டந் துறந்தாக வேண்டிய கட்டம் நெருங்கி விட்டது. காலம் ஓடிக்கொண்டே இருந்தது. தன்னந்தனியனாய், சக்தி யற்ற மன்னனாய்—மாஜி மன்னனாய் பாரூக் தத்தளித்தான்.

அவனது எழில் மிகு நாட்டை அவன் துறந்தாக வேண்டும். அவன் பிறந்த பொன்னாட்டை அவனால் மீண்டும் காணமுடியாது. அவன் தவழ்ந்து விளையாடிய மண்ணிலே மாலை ஆறு மணிக்குமேல் காலடி வைத்திடவும் முடியாத சோகச்சித்திரமானான் பாரூக்.

'மன்னர் வாழ்க! பாரூக் வாழ்க!' என்று மகிழ்ச்சிக்குரலெழுப்பித்தன்னை மனதாரநம்பி வாழ்த்திய மக்களின் வாழ்வை வரண்ட பாலைவனமாக்கித் தான் மட்டும் சுகபோகியாக வாழ்ந்த மன்னன், இன்று அதே மக்களின் தலைவன் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நாட்டை விட்டே துரத்தப்படும் துயரக்காட்சி தோன்றி விட்டது.

மாலை ஆறுமணி நெருங்கி விட்டது. பாரூக்—மாஜி மன்னன் பாரூக் பட்டத்தைத் துறந்து அதற்கான பத்திரத்திலே கையொப்பமிட்டு விட்டு, நாட்டை விட்டு வெளியேறிடக் கப்பலேறத் துறைமுகம் சென்று விட்டான்.

எகிப்து மக்கள் மன்னனது சோகப்பயணத்தை—நிலைத்த பிரிவைக் கண்டு கலங்கவில்லை. பாருகக் களித்தனர். மன்னனைத் தூற்றித் தமது எக்களிப்பைத் தெரிவித்துக் கொண்டிருந்தனர்.

மன்னனை ஒரு காலத்தில் வாழ்த்தினவர்கள் இன்று தூற்றினார்கள்; போற்றினவர்கள் இன்று தாழ்த்திப் பேசினார்கள். நகரின் முக்கிய இடங்களில் மாட்டப் பட்டிருந்த மன்னனது படங்களையெல்லாம் கற்களால் தாக்கித்துண்டு துண்டுகளாக்கிச் சின்னபின்னப் படுத்தினர்.

'எகிப்தின் அவமானச் சின்னம்! என்று பாரூக் கருதப்பட்டான்.' அதோ போகிறதுபார் எங்களை இது வரை ஆட்டிப்படைத்த அவமானச்சின்னம்! தொலைந்தது எங்களைப்பிடித்த கொடியநோய்' என்றெல்லாம் மக்கள் கூடிப்பேசிக் குதூகலித்தனர்.

நாடு நகரம், பட்டிதொட்டி எங்கும் மன்னன் முடி துறந்து வெளியேறுவதைக் கொண்டாடிக் கொண்டிருந்தனர்.

பாரூக் தனது முதல்மனைவிக்குப் பிறந்த மூன்று பெண்களுடனும், இரண்டாம் மனைவி நாரிமன் சாதிக்குடனும், அவளுக்குப் பிறந்த புவாத் இளவரசனுடனும், மிகக் குறைந்த சாமான்களுடன் துறைமுகத்தையடைந்தான். நாட்டைக் கடைசியாகப் பார்த்தான். அவனது நெஞ்சம் எதை யெதையெண்ணியதோ !

பாரூக்குடன் வேறு எவரும் உடன் செல்ல அனுமதிக்கப்படவில்லை. மாஜிமன்னருக்கென ஏற்பாடு செய்யப்பட்ட கப்பலில், குறிப்பிட்ட பாதுகாவலருடன் புறப்பட்டுச் செல்ல வேண்டிய நேரம் நெருங்கி விட்டது.

மாஜி மன்னன் பாரூக் கப்பலில் ஏறுவதற்குத் தயாராக நின்று கொண்டிருந்தார். அவருக்கெதிரே புதிய பிரதமர் அலி மெஹர் கண்களில் கண்ணீரைச் சொரிந்து கொண்டே நின்றிருந்தார். இதே அலிமெஹர்தான், புவாத் மன்னர்மாண்டதும், இங்கிலாந்தில் படித்துக் கொண்டிருந்த பாரூக் இளவரசனை மன்னராகப் பிரகடனப் படுத்தினர். எந்தக் கடற்கரையிலிருந்து பாரூக்கை மாஜி மன்னனுக்கி வழி யனுப்புகின்றனரோ அதே கடற்கரையில் தான் இங்கிலாந்திலிருந்து திரும்பிய மன்னன் பாரூக்கை வாழ்த்தி வரவேற்றனர்.

அந்த கடந்த கால நிகழ்ச்சிச் சித்திரம் அவரது நினைவுத் திரையிலே காட்சியிடத் தொடங்கியதும், அவர் தம்மையும் மறந்து அழுதுவிட்டார். என்ன செய்வது ! தாய் நாட்டின் நலனைத் தானே அவர் கருதிக் கடமை யாற்ற வேண்டும் ?

பாரூக், தன் நாட்டை விட்டு வெளியேற வேண்டிய நேரம் நெருங்கியதும் கப்பலேறி விட்டான். அதுவரையில் ஜெனரல் முகமது நஜீப்பின் வரவுக்காகக் காத்திருந்தான். நஜீப் வருவதற்கான அறிகுறியேதும் காணுததால் நேரந்தவருது கப்பலேறிப் புறப்பட்டு விட்டான். ஆறு மணி அடிக்க இரண்டு நிமிஷங்கள் வரை பாரூக் கடற் கரையிலேயே காத்திருந்தும் நஜீப் வரக் காணேம்.

பாரூக், பிரதமர் அலி மெஹரிடம் விடை பெற்ருர். அவரிடம் 'நஜீப் வரக் காணேம், நான் போகிறேன்' என்று கூறியதும்கப்பல் புறப்பட்டு விட்டது. மன்னரின் வெளியேற்றத்தின்போது மரியாதைக்காக 21 குண்டுகள் வெடிக்கப்பட்டன.

குண்டுகள் வெடித்த சத்தம் கேட்டதும் 'மன்னன் போய்விட்டான்' என்று மக்கள் ஆரவாரம் செய்து களி நடனம் புரிந்தார்கள். மிச்ச மீதியிருந்த பாரூக்கின் படங்களேயும் உடைத்தெரிந்து உல்லாசமாகப் பொழுது போக்கினர்,

நஜீப், மன்னரை வழியனுப்பப் புறப்பட்டு வந்தார். வழியில், மக்கள் வெள்ளம் அவரைச் சூழ்ந்து கொண்டது. 'வாழ்க நஜீப், வாழ்க எகிப்தின் வீரர் நஜீப்' என்று பேரொலிச் செய்தனர். கூட்டத்தை விலக்கிக் கொண்டு நஜீப் துறைமுகத்தை அடைவதற்குள் பாரூக்கின் கப்பல் குறித்த நேரத்தில் புறப்பட்டுப் போய்க் கொண்டிருப்பதைத்தான் நஜீப் காண முடிந்தது.

நஜீப் உடனே ஒரு படகில் ஏறி மாஜி மன்னனது கப்பலை நோக்கி விரைந்து சென்றார். நஜீப் வருவது கண்டு மன்னன் ஏறிச்சென்ற கப்பல் நங்கூரம் பாய்ச்சி நிறுத்தப்பட்டது. நஜீப் கப்பலை நெருங்கி மாஜி மன்னரை நேருக்கு நேராகச் சந்தித்தார். எந்த மன்னரை 1942ல் பிரிட்டிஷ் தூதர் மிரட்டி உருட்டி அவமானப் படுத்தினார் என்பதற்காக ராஜினாமா செய்ய எண்ணினாரோ, அதே நஜீப் இன்று அதே மன்னரை நாடு கடத்திப் பிரிவுப் பேச்சு பேசிக் கொண்டிருக்கிறார்! என்ன விசித்திரமான—ஆனால் வேதனைதரும் மாறுதல்!

மாஜி மன்னரும், நஜீப்பும் ஒருவருக்கொருவர் இராணுவ முறையில் வணக்கம் செலுத்திக் கொண்டனர். இருவரும் சுருக்கமாகப் பேசினர். பாரூக் விடைபெற்றுப் புறப்பட்டு விட்டார். நஜீப் திரும்பிக் கரை சேர்ந்தார்.

நாடாண்ட மன்னனை மாஜி மன்னனாக்கி ஏற்றிச் சென்ற அந்தக் கப்பல், கண்ணுக் கெட்டாதபடி மறைந்து போய்க் கொண்டே இருந்தது. பாரூக் மன்னனது அரச வாழ்வும் விரைவிலேயே எகிப்தின் கண்களிலிருந்து மறைந்துவிட்டது.

நஜீப்! ஜெனரல் முகம்மது நஜீப்! இந்தப் பெயர் இன்று எகிப்தின் இலட்சிய ஒலியாகி விட்டது! மக்களின் இதய கீதமாகி விட்டது. நஜீப் அவர்கள் உலக வரலாற்றிலேயே இதுவரை நடந்திராத புதுமைப் புரட்சியை வெற்றிகரமாக நடத்தி முடித்து விட்டார்.

நாட்டு நலன் கருதாது, கேளிக்கை வாழ்விலே கெட்டலைந்து, நாட்டைக் காடாக்கி வாழ்ந்து வந்த மன்னனை, மாஜி மன்னனுக்கி விட்டார், நாடு கடத்தியும் விட்டார். இத்தனைக்கும் எகிப்திய மண்ணில், எவரது இரத்தமும் ஒரு சொட்டேனும் சிந்தப்படவில்லை என்பதுதான் வரலாற்றுப் புதுமையாகும்—புதுமைப் புரட்சியாகும்.

தூங்கிக் கிடந்த எகிப்தில் எழுச்சியை ஊட்டினர், வீரர் நஜீப். அவரது தலைமையில், அவர் காட்டிய நல்ல பாதையிலே, நல்ல முறையிலே, சண்டையின்றி, சச்சரவுகள் ஏதுமின்றி, இரத்தக் கிளரியுமின்றி கட்டுப்பாடாக எழுந்தது, எகிப்திய எழுச்சி!

எகிப்திய எழுச்சி! எகிப்திய மக்களின் மலர்ச்சியாகும். எகிப்து நாடு தனது புதிய சகாப்தத்தைத் தொடங்கி விட்டது, நஜீப்பின் தலைமையில் நடந்த எழுச்சியிலிருந்து.

எழுச்சி பெற்ற எகிப்து, விழிப்புற்று, வீறு கொண்டு, வாழ்வில் முன்னேறிட வகையான திட்டங்களை நஜீப் வகுத்தபடி இருக்கிறுர். தீட்டிய திட்டங்கள் யாவும் உடனே நடைமுறையில் வந்து கொண்டிருக்கின்றன.

மணி முடி துறந்து, நாட்டை விட்டு வெளியேற்றப்பட்ட மாஜிமன்னன் பாருக் கப்ரித்தீவிற்குச் சென்றுன். அங்கே சில காலம் தங்கிவிட்டுப் பின்னர் ரோம் நகரம்

சென்று தங்கி யிருக்கின்ருன். முடிதுறந்து வேறு நாட்டில் தஞ்சம் புகுந்து வாழ்கின்ற நிலையிலும் பாரூக் திருந்திய வாழ்வு வாழ்வதாக அவரைப் பற்றிக்கிடைக் கும் செய்திகளிலிருந்து தெரியவில்லை. ஒரு தடவை, ஒரு மணி நேரத்திற்குள்ளாக, இது வரை உலகில் எவருமே பந்தயம் கட்டாத அளவுக்குப் பந்தயம் கட்டித் தோற்றதாகவும் ஒரு செய்தி வந்தது!

பாரூக் தன்னுடன் குறிப்பிட்ட பொருள்களைத் தான் எடுத்துச் சென்ருர். எனினும் அவர் தமது எதிர் காலவாழ்வு பற்றிய அக்கரை எதுவு மின்றித்தான், மனம்போனபடி இன்னும் ஊதாரித்தனமாகச் செலவு செய்வதாகத் தெரிகின்றது.

பாரூக் மன்னன், சுவிட்சர்லாந்து, இத்தாலி ஆகிய நாடுகளிலே இரகசியமாக ஏராளமான செல்வம் சேமித்து வைத்திருப்பதாக பலவித வதந்திகள் இன் னும் உலவிய படி உள்ளது. உண்மை நிலையைக்காலந் தான் தெரிவிக்க வேண்டியிருக்கின்றது.

முடி-துறந்த மன்னனின் வாழ்வில் மேலும் சிக்கல் கள் பெருகி வருகின்றன. அவரது இரண்டாம் மனைவி நாரிமன் சாதிக் அவரிடம் மனவேற்றுமை கொண்டு, வாழாது, எகிப்துக்குத் திரும்பியிருக்கின்ருர். அன்று பரீதாவை விலக்கிய பாரூக்கை இன்று நாரிமன் உதா சீனம் செய்கிருர். மிகவேடிக்கை யாகவும், வேதனையு மான நிகழ்ச்சிகள் தான் இவை.

# 9

"நஜீப் வாழ்க! எகிப்தை வாழ்விக்க வந்த மாவீரன் நஜீப் வாழ்க!!" என இன்று எகிப்திய மக்கள் அனைவராலும் ஒரு முகமாகப் புகழப்பட்டு வருபவரான அந்த இராணுவத் தலைவன், யார் என்பதைப் பற்றி," எகிப்திய மன்னன் பாரூக் மாஜிமன்னராக ஆக்கப்பட்ட காலம் வரை எகிப்திய மக்களிலேயே பலருக்குத் தெரியாது. மன்னரை மாஜிமன்னனாக்கி நாடுகடத்திய புதுமைப் புரட்சியைத் தலைமை தாங்கி நடத்திய போதுதான் இவரைப் பற்றிப்பலரும் அறிந்து கொள்ளும் வாய்ப்புக்கிடைத்தது.

இராணுவத் தளபதி நஜீப் என்றதும் அவர் ஒரு முரட்டு மனிதராகத்தான் இருப்பார் என்றே எவரும் எண்ணினர். ஆனால் அவரோ தன்நம்பிக்கையும், தயாளகுணமும், கட்டுப்பாடுணர்ச்சியு மிக்க கடமை வீரராகத் திகழ்ந்தார்.

இவர் ஐம்பத்தோரு ஆண்டுகளுக்கு முன் சூடானின் தலைநகரான கார்தூமில் நகரில் பிறந்தார். அவரது தந்தை ஒரு போலீஸ் அதிகாரி. இவர் புஆத் பல் கலைக்கழகத்தில் சட்டம், பொருளாதாரம் ஆகிய துறைகளில் படித்துப் பட்டம் பெற்றார். இவருக்குப் பிரஞ்சு, ஜெர்மன், இத்தாலியன், அரபி, ஆங்கிலம் ஆகியமொழிகளில் பேசத்தெரியும். இராணுவத்தில் சேர்ந்து பல காலம் பணியாற்றி வந்தார்.

1942 ல் பிரிட்டிஷ் படைகள் மன்னரின் மாளிகையை முற்றுகையிட்டு, மன்னரை மிரட்டி, தங்களுக்கு ஆதரவான பிரதமரை நியமிக்கும் படி கட்டாயப் படுத்தியதைக் கண்டித்த இராணுவ அதிகாரிகளில் இவரும் ஒருவர்.

பாலஸ்தீனத்தில் இஸ்ரவேலர்களுடன் நடந்த போராட்டத்தில் தான் அவர் முதன் முதலில் நல்லதொரு புகழும், பெயரும், பெருமையும் அடைவதற்கான சந்தர்ப்பங்கள் கிடைத்தன. அந்த போராட்டங்களில் மூன்று முறை காயமடைந்தார். மூன்றும் முறையில் குண்டு அவரது இருதயத்திற்கு மிக அருகில் மார்பில் துளைத்துச் சென்றது. அவரது நிலை கவலைக்கிடமாகி விட்டது. அவர் பிழைப்பதே கடினமென பரிசோதகர்கள் எண்ணிக் கைவிட்டு விட்டனர். ஆனால் நஜீப்பின் நாட்டுப்பற்றும், எதற்கும் அஞ்சாத இரும்பு நெஞ்சத்துணிவும் அவரை வாழவைத்து இன்று எகிப்தின் இதய கீதமாக்கி விட்டன.

காயமடைந்த பின் இஸ்மாயிலியா என்னும் இடத்தில் ஒரு பிரஞ்சு மருத்துவ விடுதியில் தங்கி ஓய்வு பெற்றார். அந்த நேரத்தில் தான் இராணுவ நினைப்புகளினூடே நாட்டு நிலைமையைப் பற்றியும் சிந்தித்து நிலைமையைப் புரிந்து கொண்டார். சின்னஞ்சிறு இஸ்ரவேல்நாடு வல்லமை மிக்க எகிப்து இராணுவத்தை எளிதில் தோற்கடித்த காரணத்தை ஆராய்ந்தார். இப்போராட்டத்தில் மாஜி மன்னன் நடந்து கொண்ட படுமோசப்பயங்கர, நாச முறைகளையும்,

நாட்டு மக்களை, நாட்டினைக் காத்திட, நாட்டின் தன் மானத்தைப் பாதுகாத்திட தன்னைத்தான் தியாகம் செய்து, போர்க்களம் புகுந்த போர்வீரர்களிடம் வெறும் வெத்து வேட்டுக்களைக்கிளப்பும், ஏன்? வெடிக்கவும் வெடிக்காத உதவாக்கரைப்படைக் கருவிகளைக் கொடுத்து கோடிக்கணக்கில் பணம் குவித்ததையும் கண்டு பிடித்தார்.

நாட்டின் நல்லிளஞ் சிங்கங்களை நாதியற்றவர்களாகப் போர்க்களத்தில் செத்துமடியச் செய்து நாட்டின் நன்மதிப்பையும் பிறரிடம் கொள்ளை கொடுத்து தனது நல்வாழ்விற்கான போகபோக்கியங்களைத் தேடிக் கொள்வதிலேயே கண்ணும் கருத்துமாய் மன்னன் பாரூக் செய்து வந்தகொடுமையை எண்ணிக்குமுறினார். கொடுமைகளைந்திட தக்க நடவடிக்கைகளை உடனே மேற்கொண்டார்.

யூதர்களுடன் நடந்த போரில் யூதர்களால் கொன்று குவிக்கப்பட்டவர்களின் கோர மரணத்திற்கெல்லாம், மக்கள் துரோகியாக வாழ்ந்த மன்னனே முழுப்பொறுப்பாளி எனப் பகிரங்கக்குற்றஞ்சாட்டினார் நஜீப். அவரது முயற்சிக்கு நாட்டைக்காட்டிக் கொடுத்திடும் கொடுமெதி யாளனை, மமதைமிக்க மன்னனை அடக்கி ஒடுக்குவதற்கு இராணுவம் முழு மனதுடன் ஒத்துழைத்தது.

இயற்கையிலேயே எண்ணத் தெளிவும், இரும்பு நெஞ்சமும், கொண்ட கொள்கையை நல்ல முறையில் நிறை வேற்றிடும் உயர்ந்த பண்பும் படைத்த நஜீப்

தக்க நேரத்தில் தமது எண்ணத்தை எந்தவித சேதமு மின்றி நிறைவேற்றி விட்டார்.

மன்னனுக் கெதிராக இராணுவம் புரட்சி செய்ய ஆரம்பித்த நேரத்தில் அதற்கு ஆதரவான சூழ்நிலை நாடெங்கும் ஏற்கெனவே உருவாகி யிருந்தது. மன்ன னைப் பற்றிய ஊழல்களையும், குடும்பக் கோளாறுகளை யும், ஊதாரித்தனத்தையும் காட்டிக் கொடுக்கும் கய மைத்தனத்தையும் வெளியிட்டுக் கண்டித்து எகிப்திய பத்திரிகைகள் எழுதி வந்தன. இவைகளில் சிறந்த சேவை செய்த பத்திரிகை " அக்பாருல் யவ்மு " (தினச் செய்தி) என்பதாகும். அதன் ஆசிரியர்களாக " முஸ் தபா அமீன் ", " அலி அமீன் " என்ற இரு இளைஞர் கள் பெரும்பணி செய்தனர்.

அவர்கள் இருவரும் இரட்டைப் பிறவிகள். இவர் கள் இருவரது குரல், நடை, உடை, உருவம் யாவும் ஒரே மாதிரியாக இருந்தன. ஒருவர் இங்கிலாந்தில் படித் தவர். மற்றவர் அமெரிக்காவில் படித்தவர். இவர்களது கூட்டு முயற்சியால் நடத்தப்பட்ட அப்பத்திரிகையில், மன்னனது அடாத செயல்களை அப்படியே வெளியிட்ட னர். இதனால் மக்களிடையே மன்னனுக்கெதிரான எழுச்சி ஏற்பட்டது.

இதைக் கண்ட மன்னன் எந்தப் பத்திரிகைகளும் மன்னனைப் பற்றியோ அல்லது மன்னனது குடும்பங் களைப் பற்றியோ கண்டித்து எழுதக்கூடாது என்று உத்திரவிட்டான். இதன் பிறகு அந்த இரட்டையர்கள் மன்னனைப் பற்றிய செய்திகளை, மன்னனது பெயரும்,

அவனது கூட்டுத் தோழர்களின் பெயர்களும் வரும் இடங்களில் மட்டும் வேறு கற்பனைப் பெயர்களை வைத்து வெளியிட்டு வந்தனர்.

மக்கள் அந்தக் கற்பனை அரசன் முதலியவர்கள் தங்களது மன்னன்தான் என்பதைப் புரிந்து கொண்டனர். ஒரு முறை அப்பத்திரிகையில் "ஒரு அரசருடைய கூட்டுத் தோழர்கள் திருடர்களாக இருந்தால் அந்த அரசனும் திருடன் என்றுதான் எண்ணப்படுவான்" என்று எழுதியதற்காக அதன் எல்லா இதழ்களும் பறிமுதல் செய்யப்பட்டன மன்னன் பாரூக்கினால்.

பாரூக் நாடு கடத்தப்பட்டபோது ஏதோ சில தவறுதல் காரணமாக இந்த இரு ஆசிரியர்களும் கைதாகி இரண்டு நாள் காவலில் இருந்தனர். இச்செய்தியறிந்த நஜீப் இவர்களை உடனே விடுதலை செய்தார்.

இந்த நல்லவர்களுக்கு இத்தீங்கு நேரிட்டதை எண்ணி, மனமார வருந்தி கெய்ரோ ரேடியோவில் ஒரே நாளில் பலமுறைகள் திரும்பத் திரும்ப, நடந்த தவறுதல்களை வெளிப்படையாகத் தெரிவித்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். அத்துடன் அந்த இரட்டையர்களைச் சந்தித்து இரண்டு மணி நேரம் நாட்டு நடப்புகளைப் பற்றிப் பேசினார். நஜீப்பின் பெருந்தன்மையை அந்த ஆசிரியர்களும், எகிப்து மக்களும் பெரிதும் பாராட்டினர்.

நாட்டில் மன்னன் மீது ஏற்பட்டிருந்த அளவு கடந்த வெறுப்புணர்ச்சி, ராணுவப் புரட்சிக்கு உறு

துணையாக அமைந்தது. நாட்டின் நெருக்கடியான நிலைமையை, நன்கு அலசி ஆய்ந்து நல்லவர்களையெல்லாம் நாட்டு மக்களின் நலம் நாடி உழைத்த நாட்டுத் தலைவர்களையெல்லாம் நஜீப் ஒன்று திரட்டினார். மன்னனது கவலையற்ற போக்கை விளக்கி நாட்டு மக்களின் நல்வாழ்வையும் எகிப்தின் தன்மானத்தையும் பாதுகாக்க வேண்டிய நடவடிக்கைகளை உடனடியாக எடுத்தாக வேண்டும். இன்றேல் நாடு மேலும் மேலும் நலிந்து, நைந்து, நாசமாகிவிடும் என்றுகூறி எகிப்திய எழுச்சியை உருவாக்கினார்.

எகிப்திய எழுச்சி! மன்னனை மணிமுடி துறக்கச் செய்து நாடு கடத்திய இரத்தமற்ற இராணுவப் புரட்சி துளிர்த்துத் தழைத்துத் தளிர்விட்டது. ஒரே நாளில் இராணுவம் மன்னனிடமிருந்து எல்லா அதிகாரங்களையும் கைப்பற்றியது. சட்ட வரம்பிற்குட்பட்ட மன்னனாகவும் விளங்க அருகதையற்றவன் என்பதை தெரிந்து கொண்டபின் மன்னனை முடிதுறக்கச் செய்து நாடு கடத்தி விட்டது. நாட்டின் நிர்வாகம் இராணுவத் தலைவர் நஜீப்பின் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடந்து வந்தது.

ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும் நஜீப் நாட்டு நிர்வாகத்தில் புரட்சிகரமான மாறுதல்களைச் செய்தார். தேசத் துரோகிகள் என்று கருதப்பட்ட அனைவரையும் தீர விசாரித்துத் தண்டித்தார். நல்ல திறமையான ஊழியர்களையே நிர்வாகத்தில் பங்கு கொள்ளச் செய்தார். ஒழுங்கான மக்களாட்சி நடை பெறப் பெரிதும் பாடு

பட்டார். மன்னர் ஆட்சியின்போது தகாத வழிகளிலே மக்களைச் சுரண்டிக் கொழுத்தவர்களின் சொத்துக்களை யெல்லாம் பறிமுதல் செய்தார்.

மக்கள் நலனுக்கு விரோதமான செயல்களில் ஈடு பட்டோர் எவ்வளவு செல்வாக்குப் படைத்தவர்களா யினும் அவர் தண்டிக்காமல் விடவில்லை. தீயவழியிலே மக்களைத் திருப்பி விட்ட சில கட்சிகளை அடியோடு அழித்து விட்டார். இவைகளால் பாதிக்கப்பட்ட சில நாசகாரக்கும்பல்கள் நஜீப்பின் ஆட்சியைக் கவிழ்த்து அரசாங்கத்தைக் கைப்பற்ற சதித்திட்டங்கள் தீட்டின. இதற்கு இருபத்தைந்து இராணுவ உயர்தர அதிகாரி களும் உடந்தையாக இருந்தனர்.

பயங்கரமான இச்சதியைக் கண்டு பிடித்து அதில் சம்பந்தப்பட்டவர்களை யெல்லாம் கைது செய்து சதிக் கும்பல்களை முளையிலேயே கிள்ளி விட்டார். நெருக்கடி யான உள்நாட்டு நிலைமையைச் சமாளிக்க நஜீப் ஒரு சர் வாதிகாரியைப் போலவே சில சமயம் நடக்கவேண்டி நேருந்தது. நஜீப் தமது விருப்பம்போல் எதையும் உடனே செய்து விடாமல் பிறரையும் கலந்துதான் செய்வாராம்.

அவர் பொது மக்களுடன் நெருங்கிப்பழகி, பொதுக் கூட்டங்களிலும் பேசுகிறார். மக்களின் குறைகளை நேரில்கேட்டறிந்து வேண்டுவனசெய்யத் தவறுவதில்லை.

நஜீப் செய்த நிலச் சீர்திருத்தச் சட்டம் எகிப்து மக்களுக்கு மிகநன்மை தருவதாகும். எகிப்தின் விளை

நிலமனைத்தும் குறிப்பிட்ட சில பணக்காரர்களிடமே இருந்தன. நிலமற்ற ஏழை மக்கள் ஏராளமாக ஏங்கித் தவித்துத் துடித்தனர். எந்த நாட்டிலும் இல்லாத அளவுக்கு ஏழைக்கும் பணக்காரனுக்குமிடையே அதிக வேற்றுமை யிருந்தது. நாட்டின் வறுமையைப் பயன் படுத்தி சில பணக்காரர்கள் அரசியலில் ஆதிக்கம் செலுத்த தங்கள் கட்சியை பலன்படுத்த இந்த அவல நிலை சாதகமாகயிருந்தது.

இந்த நிலைமைகளை மாற்றி ஏழை மக்களை வாழ வைத்தது, நஜீப்கொண்டு வந்தநிலச்சீர் திருத்தச் சட்டம். இதன்படி எகிப்து நாட்டில் எந்த ஒரு தனிமனிதனும் "இருநூறு ஏக்கருக்கு" மேல்நிலம் வைத்துக் கொள்ளக் கூடாது. இதற்கு அதிகமாக உள்ளதை அரசியலாரே நியாயமான விலைக்கு வாங்கிக் கொண்டு, அதற்குரிய பணத்தை முப்பது வருடங்களில் கொடுத்து ஈடு செய்வர். இப்படிக் கிடைக்கின்ற நிலங்களை, நிலமில்லாத ஏழைகட்கும் விவசாயி கட்கும் தரப்படும்.

கல்யாணமாகிக் குடும்பம் நடத்தும் ஏழைகளுக்கே இதில் முதல் பங்கு உண்டு. இந்த சட்டத்திற்கு எதிராக நடப்பவர்கள் ஐந்து வருட சிறைத் தண்டனை பெறுவர். இந்தப் புரட்சிகரமான நடவடிக்கைகளால் எகிப்தின் பெருங் குடிகள் — ஏழை மக்கள் நல்வாழ்வு வாழ் வார்கள் என்பது உறுதி.

எகிப்தின் வெளி நாட்டுக் கொள்கைகளிலும் நஜீப் தீரத்துடனும், வீரத்துடனும் செயலாற்றுகிறார். எகிப்

திலிருந்து பிரிட்டிஷ் இராணுவங்கள் வெளியேற வேண்டுமென்றும், அதற்கான தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். எகிப்திதைக் காட்டி, சூடானில் ஆதிக்கம் செலுத்தி வந்த ஆங்கிலேய ஏகாதிபத்தியம் சூடானை விட்டு வெளியேறும்படி செய்தார்.

நஜீப்பின் தலையீட்டினால் சூடானின் சுயநிர்ணய உரிமையை எகிப்து அங்கீகரித்தது. பிறர் தூண்டுதலின்றி சூடான் மக்கள் தங்கள் எதிர்கால வாழ்வைத் தாங்களே தீர்மானித்துக் கொள்ள வழி ஏற்பட்டது. சூடானில் அரசியல் நிர்ணய சபை கூடி சூடான் எகிப்துடன் சேர்ந்து வாழ்வதா? அல்லது தனித்தே வாழ்வதா? என்பதைச் சீக்கிரத்தில் தீர்மானிக்கும். அதற்கு எகிப்து கட்டுப்படும்.

அடுத்து சூயஸ்கால்வாய் பகுதியிலிருந்து பிரிட்டிஷ் படைகளை அடியோடு வெளியேற்ற பிரிட்டனுடன் பேச்சு வார்த்தைகளை ஆரம்பித்து விட்டார். இதிலும் நஜீப் சண்டைச் சச்சரவுக்கு இடமின்றி சமாதான முறையிலேயே வெற்றி காண்பார் என்று எகிப்திய மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

இராணுவ பலத்தால் மன்னனை அடக்கி, ஒடுக்கி, நாட்டை விட்டு ஓட்டிவிட்ட நஜீப் ஓராண்டு காலத்திற்குள் நாட்டின் நிர்வாக நிலைமையை சீர்திருத்தி, நாட்டில் நிலையான மக்களாட்சி நடைபெறத்தக்க சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறார். அறியாமையும் வறுமையும் அதிகமாகத் தாண்டவமாடும் எகிப்திலே, எழுச்சி

யுண்டாக்கி நல்லதொரு குடியரசு நாடாக விளங்கச் செய்திருக்கிறார்.

1953 ஜூன் 18ந் தேதியன்று எகிப்து குடியரசு நாடாக பிரகடனப் படுத்தப்பட்டது. எகிப்துக் குடியர சின் முதல் ஜனாதிபதியாக, எகிப்திய எழுச்சியின் எழி லுருவமான ஜெனரல் முகம்மது நஜீப் இருந்து வரு கிறார். மன்னர் ஆட்சி மறைந்து மக்களாட்சி மலர்ந்து விட்டது, அங்கே.

எகிப்தின் ஜனாதிபதி நஜீப் மாஜி மனனன் பாரூக் மக்களைச் சுரண்டிச் சேமித்து வைத்த செல்வங்களை யெல்லாம் அரசாங்க உடமையாக்கி விட்டார். மாஜி மன்னனால் அவனது பொழுது போக்கிற்காக சேமிக்கப் பட்டிருக்கும் விலைமதிக்க முடியாத பொருள்களையெல் லாம் மக்கள் மன்றத்திலே பகிரங்க ஏலம் விட்டு வரும் தொகையை நாட்டுக்காக்க முற்பட்டிருக்கிறார்.

மன்னனது கொடுங்கோன்மையில் சிக்கிச் சீரழிந்த மக்களின் எதிர்கால வாழ்வைச் செம்மைப் படுத்தி சீரான வாழ்வு, நல்ல வாழ்வு வாழ்வதற்கான வழிவகை களை நஜீப்பின் நல்லாட்சி நாளுக்கு நாள் செய்தபடி யிருக்கிறது.

## 11

சமீபகால சரித்திரத்தில் எகிப்திய எழுச்சியைப் போன்ற இரத்தம் சிந்தாத இராணுவப் புரட்சி எந்த

நாட்டிலும் நடக்கவில்லை. இராணுவ ஆட்சியில் ஆரம்பித்த புரட்சி, குடியரசுப் பிரகடனம் செய்து விட்டதன் மூலம் ஒரே வருடத்தில் முடிவடைந்து விட்டது மிகவும் ஆச்சரியமான செய்தியாகும்.

மாஜி மன்னன் பாரூக்கின் வாழ்க்கை ஏடுகளிலிருந்து பல நல்ல பாடங்கள் மனித சமுதாயத்திற்குக் கிடைக்கின்றன. பாரூக்கின் பாங்கான, பண்பான ஆரம்ப ஆட்சியின் போது அவன் மக்களால் பெரிதும் மதிக்கப் பட்டான். அன்னியர் ஆதிக்கத்தை வெறுத்து எதிர்த்தபோது புகழப் பட்டான். ஏழை எளியவரின் துயர் துடைத்திடும் நல்லவனாக விளங்கிய காலத்தில் மக்களின் இதயத்திலே இடம் பெற்றான். ஆனால் பிற்காலத்தில், ஆடம்பரமாக, காமக்களியாட்டங்களில் வரை, முறையின்றி ஈடுபட்டு வாழ்ந்தபோது இகழப் பட்டான். மக்களைச் சுரண்டிடும் நேரத்திலே தூற்றப் பட்டது மட்டுமல்ல; நாட்டை விட்டே துரத்தப் பட்டான்.

பாரூக்கின் ஆரம்பகால நல்ல வாழ்வும் வாழ்க்கை முறையும், இடையில் வாழ்ந்த வகைகெட்ட வாழ்வும் அதனால் இறுதியில் அடைந்த சீர்கேடும் உலகின் ஒவ்வொரு பகுதிக்கும், ஏன் ஒவ்வொரு தனி மனிதனுக்கும் தக்கதொரு எச்சரிக்கையாகும்.

மக்கள் சக்தியே, மாநிலத்தில் மகத்தான சக்தி என்பதை எடுத்துக்காட்டி விட்டது எகிப்திய எழுச்சி!

மக்கள் சக்தியை மதபோதகர்களின் பாவபுண்ணிய போதனைகளாலும், ஏழை பணக்காரன் என்ற வேற்றுமையினாலும், படைபலத்தாலும், அதிகார ஆட்சிப் பலத்தினாலும் அடக்கியாள நினைப்பது நடவாது என்பதை உலகுக்கு முரசறைந்து ஒலித்துக் காட்டி விட்டது எகிப்திய எழுச்சி!

புரட்சி! மக்கள் புரட்சி! என்றால், ஆயுதமேந்த வேண்டும், ஆட்சியாளர்களைத் தாக்கவேண்டும், ஆதிக்கக்காரர்களை வாட்டி வதைக்க வேண்டும், இரத்த ஆறு பெருக்கெடுத்தோடவேண்டும் என்றெல்லாம் எண்ணி நடந்திடும் சிலர் மக்கள் சக்தியைத் திரட்டி வருவதைக் கேலி செய்கிறது எகிப்திய எழுச்சி!

மக்களின் ஒருமனப்பட்ட, பண்பட்ட சக்தி திரண்டு விட்டால் இரத்தச்சேதமின்றி எதையும் சாதித்துவிட முடியும் என்பதை எகிப்திய எழுச்சி மிகமிகச் சாதரணமான, சமாதான முறையில் மன்னனை முடி துறந்து வெளியேறச் செய்ததன் மூலம் உலக மக்கள் தெரிந்து நடந்திட அறிவுறுத்துகின்றது.

எகிப்திய எழுச்சியை எண்ணிப்பார்த்துதமிழகமும், தனது சக்தியை ஒன்று திரட்டி, இரத்தச்சேதமின்றி, நல்ல முறையில் தன்னாட்சி—தனியாட்சி—தனியரசு செலுத்திடத் தயாராகவேண்டும்.

முற்றும்!

எண்ணப்பூங்காவின் இரண்டாம் வெளியீடு

★

மு. நமசிவாயம்

தீட்டிய

# மாடலன்

விலை ரூபாய் ஒன்று

தமிழகத்தின் தன்மான வாழ்வில் புகுந்த முதல் ஆரியப் புல்லுருவியின் சாகசங்களை விளக்கிடும் வரலாற்று ஓவியம்!

★

தேவைக்கு :

எண்ணப்பூங்கா
10, வெங்கடேசமேஸ்திரி தெரு,
சென்னை—1.